
ISSN 1703-9185

# ஆத்மஜோதி

**Arthmajothy**

**January - March 2014**

விஜய வருட
தை - பங்குனி 2014
இலவச வெளியீடு
3000 பிரதிகள்



சிவயோகசுவாமிகளின் 50 ஆவது ஆண்டு சிவபதக் குருபூசை

# வீடு, வியாபார நிலையங்கள் வாங்க விற்க





**Siva Shanmuganathan**
Real Estate Broker
***Cell: 416-545-7482***

**Joy Selvanayagam**
Real Estate Broker
***Cell: 416-358-6928***

**Homelife/Future Realty Inc.,Brokerage,**
**7 Eastvale Drive Unit 205 , Markham, L3S 4N8**
**905-201-9977, Fax: 416-335-5535 / 905-201-9229**

# வாகன விபத்தா? அழையுங்கள்

# MR. P. SINGARAJ

**MICHAEL TAYLOR**
**A PROFESSIONAL CORPORATION**






NO COMMISSION FOR HOUSEKEEPING!
NO COMMISSION FOR CARE GIVER!
NO COMMISSION FOR ATTENDANT CARE!
NO COMMISSION FOR INCOME REPLACEMENT!

வாகன விபத்தால் உங்களுக்கு ஏற்படும் இழப்புகளை தமிழிலும் ஆங்கிலத்திலும் உரையாடி சரியான முறையில் பெற்றுக்கொள்ள வேண்டுமானால் நீங்கள் அழைக்கப்பட வேண்டியவர் Mr. P. சிங்கராஜ். இவர் உங்களின் நண்பன்.





**HONEST AND FRIENDLY SERVICE**
**CALL: MR. P. SINGARAJ**
416-993-8443
905-471-3058




உ
சிவமயம்
# ஆத்மஜோதி
தாபிதம்: 1948

ARTHMA JOTHY
Est. 1948
ISSN 1703-9185

கனடா மலர் 15:
இதழ் 1
விஜய வருடம்
தை - பங்குனி
திரு. ஆண்டு -2045
ஆங்கில ஆண்டு 2014



**கௌரவ ஆசிரியர்**
டாக்டர் இ. இலம்போதரன்

**பிரதம ஆசிரியர்**
திரு. வி. கந்தவனம்

**உதவி ஆசிரியர்கள்**
திரு. செ. சோமசுந்தரம்
திரு. சிவ. முத்துலிங்கம்

**எழுத்தமைப்பு**
திரு. மா. கனகசபாபதி

**அச்சுப் பதிப்பு**
விவேகா அச்சகம்



**வெளியீடு**
ஆத்மஜோதி
தியான நிலையம்
பதிவு இல: 1476651



**தொடர்பு முகவரி**
Siva Muthulingam
ARTHMAJOTHY ILLAM
1473 Birchmount Rd.
Toronto, ON. M1P 2G4
Tel: (416) 724-6240
www.arthmajothy.org


## உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| ஆசிரியர் தலையங்கம் | 2 |
| எங்குமுள்ள பிள்ளையார் | 4 |
| தவத்திரு யோகர் சுவாமிகளின் அருளாட்சி | 5 |
| யோகர் சுவாமிகள் | 10 |
| கனடா சிவதொண்டன் நிலையம் தோற்றமும் வளர்ச்சியும் | 13 |
| சிவயோக சுவாமிகளின் திருவெண்பா | 17 |
| Sivayoga Swamikal was once met by the Peradeniya university students | 22 |
| இந்திய திருத்தல யாத்திரை 2013 | 24 |
| திருமந்திர அரசாட்சி முறை | 30 |
| சைவ சித்தாந்தமும் அறிவியலும் | 33 |
| திருமுறை மாநாட்டுச் சிறப்பு மலர் 2013 - விமர்சனம் | 37 |
| இந்து சமயப் பேரவைச் செய்திகள் | 44 |
| ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை | 47 |

# தன்னைத்தான் அறிதல்

சற்குரு யோகர்சுவாமிகள் இறைபதம் அடைந்து ஐம்பது ஆண்டுகள் ஆகி விட்டன. ஆனாலும் அவர் எம்முடனேயே வாழ்ந்துகொண்டிருக்கிறார் என்பதுதான் உண்மை. மகான்கள் மறைவதுமில்லை அவர்களது அருளாட்சி குறைவதுமில்லை.

உலகெங்கணும் உள்ள சிவதொண்டர்கள் சுவாமிகளின் ஐம்பதாவது நினைவு தினத்தை முன்னிட்டு நினைவுச் சொற்பொழிவுகளோடுகூடிய விழாக்களாக நடத்தத் திட்டமிட்டு வருகின்றனர்.

இத்தகைய விழாக்களின் நோக்கம் சுவாமிகளின் நற்சிந்தனை நூற்போதனைகளை முன்னிலைப்படுத்துவதுதான். நற்சிந்தனை அவர் உலகத்தவருக்கு அருளிச்செய்த அரும்பெருஞ் செல்வம். அதன் மூலப் பொருள் **தன்னைத்தான் அறிதல்.**

நூல் 'என்னை எனக்கு அறிவித்தான் எங்கள் குருநாதன்' என்றே தொடங்குகின்றது. அவரை அவருக்கு அறிவித்த குருநாதன் செல்லப்பா சுவாமிகள். அவரை யோகர்சுவாமிகளின் குரு என்றே பலரும் கூறுவர். ஆனால் யோகர் சுவாமிகள் 'எங்கள் குருநாதன்' என்று அழைத்தது அவர் தனக்கு மட்டுமன்றி எல்லோருக்குமே குருவானவர் என்று அருளிச்செய்வதைக் கவனித்தல் வேண்டும். அதனாலேதான் யோகர்சுவாமிகளுடன் சேர்த்து செல்லப்பா சுவாமிகளையும் நாம் வணங்குகின்றோம்.

தன்னைத்தான் அறிவதற்குக் குருவருள் வேண்டும். செல்லப்பா சுவாமிகளின் 'யாரடா நீ என்ற கேள்வியே யோகர்சுவாமிகளைச் சிந்திக்கவைத்தது; நல்லூர்த் தேரடியில் தவமிருக்க வைத்தது; சீவன்முத்தர் நிலைக்கு இட்டுச் சென்றது.

**தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய**
**மன்னுயிர் எல்லாம் தொழும்**

---

*உன்னை நீ உயர் நிலைக்கு வழி நடத்துவாயாக*

என்றார் வள்ளுவர் பெருமான். தானறப் பெறுதல் தன்னைத்தான் அறிதல். தன்னைத்தான் அறிதல் என்பது பிறவிப்பயனை விளங்கிக்கொள்ளுதல். தனது குறைநிறைகளை மதிப்பிட்டுப் பிறவிப்பயனைச் செய்யத் தன்னைத் தகைமை யுள்ளவ ராக்குதல். 'நானார் என் உள்ளமார் ஞானங்களார்? என்னை யாரறிவார்?' என்று கேட்ட மணிவாசகப் பெருமான் 'கற்பனவும் இனியமையும்' என்றார்.

தம்மைத்தாம் அறியாமல் பலர் சண்டைபோடுகிறார்கள். ஆனால் சிவதொண்டர் அவ்விதம் செய்தலாகாது.

சுவாமிகளின் போதனைகளை உணர்ந்து கற்றுவரின் ஒரு பொல்லாப்பும் இல்லை.

- வி. கந்தவனம்

---

## ஆத்மஜோதி வாசகர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

ஆத்மஜோதி அன்பர்களே

ஆத்மஜோதி காலாண்டு இதழானது 3000 பிரதிகள்படி ஆண்டுக்கு 12000 மலர்கள் இலவசமாக தபாலிலும், நேரடியாகவும், வியாபார நிலையங்களிலும் ஆலயங்களிலும் விநியோகம் செய்யப்பட்டு தங்கள் கரங்களில் தவழுகின்றது.

65 வருடங்களுக்கு மேலாக தடையின்றி வெளிவரும் ஆன்மீக இதழ் கனடாவிலிருந்து தொடர்ந்து வெளிவருவது ஈழமக்களின் ஆன்மீகப் பற்றுக்கு நல்லதொரு சான்று. இப் பெருமை வாய்ந்த 'ஆத்மஜோதி' க்கு தபால் செலவு உட்பட இதர செலவுகளும் உண்டு.

அருட்செல்வம் நிறைந்த 'ஆத்மஜோதி' பொருட் செல்வம் குறைந்த நிலைகண்டு மனம் கலங்குகிறோம்.

ஆன்மீக நூல்கள் வெளிவர உதவி புரிதல் ஞானதானம் ஆகும். ஞானதானத்தின் பிரதி பலனாக பரம்பரை பரம்பரையாக கல்விச் செல்வம் பெறலாம். உடல் உழைப்பால் வரும் பணச் செல்வம் இப் பிறப்பிற்கு பயன் தரும். கல்விச் செல்வம் எப்பிறப்பிற்கும் பயன் தரும். ஞானதானம் பற்றி ஞானிகள் மக்களை ஊக்கப் படுத்துவது இதன் பொருட்டேயாகும்.

ஞானதானம் செய்து தாங்களும் தங்கள் பிள்ளைகளும் பயன்பெற அன்போடு 'ஆத்மஜோதி' வேண்டுகிறது. தங்களது நிதியுதவியை விருப்புடன் வரவேற்கிறோம்.

# எங்குமுள்ள பிள்ளையார்

வி. கந்தவனம்

பழுகாமம்

மாவேற்குடாப் பிள்ளையார்

வழிகாணா தெங்கெங்கும் அலைவீர் வாரீர்
மனத்துக்குக் கட்டுண்டு மலைவீர் வாரீர்
பழிபூணும் கயமுகனின் பகைமை நீக்கிப்
பரிவுடனே வானோர்க்குப் பதவாழ் வீந்தார்
பழுகாமப் பதிஞான பாலன் வேலன்
பார்த்திருக்க வீற்றிருந்து பரவி நாளும்
குழைவாரின் குறைதீர வருளு மாவேற்
குடாப்பிள்ளை கழலேத்திக் குறைதீர்ப் பீரே. (128)

காரைதீவு

நந்தவனப் பிள்ளையார்

செந்தமிழை வளர்த்தகுறு முனிவர் சீற
சிரித்தவரின் சிறுகுடத்தைக் கவிழ்த்த செல்வன்
சிந்தைநல அன்பர்பதி காரை தீவில்
திகழ்ந்தருளித் தொல்லைதுயர் தீர்க்கும் பிள்ளை
அந்தமிலா மதிநலத்தை விபுலா நந்த
அடிகள்தொழு தேத்தவுவந் தருளிச் செய்த
நந்தவனப் பிள்ளையினை வணங்கின் நாடி
நற்றமிழும் கலைமகளும் நண்ணு வாரே. (129)

வீரமுனை

சிந்தாத்திரைப் பிள்ளையார்

ஓர்மூல மந்திரத்தில் உதித்த பிள்ளை
உலகமே பெற்றோரென் றுரைத்த பிள்ளை
நீர்மூழ்கி நெடுங்காலம் நிலைத்த பிள்ளை
நீள்பயண நாவாயை நிறுத்தி வைத்துச்
சீர்பாத தேவிக்குக் கருணை செய்த
சிந்தாத்தி ரைப்பிள்ளை யாரைச் சென்று
பார்போற்றும் வீரமுனைப் பதியில் வாழ்த்தின்
பயணசுகம் புகழ்செல்வம் பலிக்கு மாமே. (130)

- வி. கந்தவனம்

# தவத்திரு
# சிவயோக சுவாமிகளின் அருளாட்சி

சு. சிவதாஸ்
முன்னாள் ஆசிரியர், ஸ்ரான்லிக் கல்லூரி

யாழ்ப்பாணம் மாவிட்டபுரத்தில் அவதரித்துக் கல்லூரிக் காலங்களில் இருந்து கொழும்புத்துறையில் வாழ்ந்து பின்னர் தமது தவவாழ்வையும் கொழும்புத்துறையிலே கழித்து முடித்த கொழும்புத்துறை யோகர்சுவாமிகள் என்று பல்லோரும் அழைக்கும் இந்த மகானுடைய காலம் 1872 தொடங்கி 1964 வரைக்கும் என்பதாம். சுமார் 92 ஆண்டுகள் நிலவுலகிலே வாழ்ந்து அருளாட்சி செய்த இந்த மகானுடைய பெருமையை இவ்வளவு தான் என்று கூறமுடியாதுள்ளது.

ஈழத்திலே சிங்களவர், இஸ்லாமியர் கூட இவரை பெரிய மகானாக ஏற்றுக்கொண்டார்கள். அன்னிய நாட்டு வெள்ளையின மக்கள்கூட இவரின் பெருமையை புரிந்துகொண்டார்கள். இவர்களுடைய சீடர்களிலே மார்க்கண்டு சுவாமிகள், செல்லத்துரை சுவாமிகள் போன்றோரை விடவும் அமெரிக்க வெள்ளையினத்தவராகிய சுப்பிரமுனிய சுவாமிகள், இங்கிலாந்தைச் சேர்ந்த சாந்த சுவாமிகள் எனப் பல சீடர்கள் இருந்திருக்கிறார்கள். இதில் சாந்தசுவாமிகள் என்பவர் வெள்ளை யருடைய ஆட்சிக்காலத்தில் கடைசி மகாதேசாதிபதியாக இருந்த சோல்பரிப்பிரபுவின் மகன் ஆவார். இவர் மட்டக்களப்பு செங்கலடியில் அமைந்திருக்கும் சிவதொண்டன் நிலையத்தில் பலகாலம் தங்கியிருந்து பணியாற்றிப் பின்னர் இங்கிலாந்திலே அமரத்துவம் அடைந்தார். மேலும் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த நரிக்குட்டிச் சுவாமிகள், ஜேர்மனியைச் சேர்ந்த கௌரிபாலா சுவாமிகள் போன்றோரும் யோகர்சுவாமிகளின் அருள் பெற்றவர்களாவர். இவர்களை விடவும் இல்லறத்தில் சிறப்புற ஒழுகிய இலங்கை நிருவாக சேவையைச் சேர்ந்தவர்களான திரு. எம். ஸ்ரீகாந்தா மற்றும் திரு. வயிரமுத்து என்பவர்களும் தவத்திரு யோகர்சுவாமிகளால் ஆட்கொள்ளப்பட்டவர்கள். மேலும் தற்காலத்தில் கனடா ரொறன்ரோ நகரில் வாழ்ந்துவரும் முன்னாள் கனடாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகர்

---

*தன் மனச்சாட்சிக்கு எதிராகப் போகக் கூடாது.*

டாக்டர் ஜேம்ஸ் ஜோர்ச் என்பவரும் யோகர் சுவாமிகளால் ஆட்கொள்ளப்பட்டவர். இவர் 1960 - 1964 காலப்பகுதியில் இலங்கையில் கடமையாற்றியபோது சுவாமியின் பக்தரானார். இதேபோன்று பிரான்ஸ் தேசத்தைச் சேர்ந்த டாக்டர் சேர்ச் ரேய்னோட் என்ற தத்துவ ஞானியும் விஞ்ஞானியுமாகிய இவர் 1950 இல் இலங்கைக்கு விஜயம் செய்தபோது யோகர் சுவாமிகளால் ஆட்கொள்ளப்பட்டு சந்திரபாலா என்ற நாமமும் சூட்டப்பட்டார். சந்திரபாலா 'அகிலஉலக மாபெரும் சகோதரத்துவம்' என்ற பெயரில் நிறுவனம் ஒன்றை நிறுவித் தென் அமெரிக்க நாடுகளில் 43 கிளைகளை உருவாக்கினார். யாழ்ப்பாணம் கோப்பாயைச் சேர்ந்த ரிஷி தொண்டுநாதன் என்பவர் சுப்பிரமுனிய சுவாமியின் சீடராவர். ரிஷி தொண்டுநாதனே எங்களுக்கு டாக்டர் ஜேம்ஸ் ஜோர்ச் என்பவரைப் பற்றியும் டாக்டர் சேர்ச் ரேய்னோட் என்பவரைப் பற்றியும் தமது கட்டுரைகள் மூலமாகத் தெரியப்படுத்தியுள்ளார்.

அமெரிக்கா ஹவாய் மாநிலத்தில் உள்ள காவாய் என்னும் தீவில் சுப்பிரமுனிய சுவாமிகள் இந்துத் துறவியர் மடத்தை நிறுவிச் சிவனாலயத்தை அங்கு அமைத்துப் பல வெள்ளையர்களை வாரிசுகளாக்கிவிட்டுச் சென்றுள்ளார். இந்த துறவியர் மடத்திலேதான் ரிஷி தொண்டுநாதன் தமது குருவாகிய சுப்பிரமுனிய சுவாமிகளுக்கு தொண்டு செய்து வந்தார். ஈழத்திலும் ஏனைய நாடுகளிலும் ரிஷி தொண்டுநாதன் ஆற்றிவரும் சமுதாய நலப் பணிகள் ஏராளம்.

இவ்வாறாக நாங்கள் பார்க்கிறபோது தவத்திரு சிவயோகசுவாமிகள் எவ்வாறு தமது அருளாட்சியை இன்னும் செய்துகொண்டு இருக்கிறார் என்பது எமக்கு புலனாகிறதல்லவா? ஈழத்திலே யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையம், மட்டக்களப்பு செங்கலடி சிவதொண்டன் நிலையம் சுவாமிகளின் தொண்டினை கட்டுக்கோப்பான முறையில் செய்து வருகின்றன. 1964 ஆண்டு பங்குனி ஆயிலியத்தில் மறைந்தார் சுவாமிகள். இன்று 2014ல் அவர் மறைந்து 50 வருடங்கள் பூர்த்தியாவதையிட்டு கனடாவில் இயங்கிவரும் ஒன்ராறியோ இந்து சமயப் பேரவையினரும் தமது காலாண்டு சஞ்சிகையான ஆத்மஜோதியை

---

*உடம்பினை ஓம்பினால்தான் ஞானமும் அடையலாம்.*

யோகர்சுவாமிகளை நினைவுகூரும் விசேட பதிப்பாக வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகிறோம். சமுத்திரம் வலிந்தாற் போன்று பரவிவரும் யோகர்சுவாமிகள் பற்றி ஒரு கட்டுரையை வடிப்பதற்கு மிகவும் சிரமப்பட வேண்டியிருக்கிறது. ஏனெனில் எதில் தொடங்கி எதில் முடிப்பது என்பது தான்.

சாதாரண மக்கள் ஆன்மீகப் பயன்பெறும் பொருட்டு கருணையினால் எழுதியவைதான் 'நற்சிந்தனைகள்' என்ற நூலில் சேர்க்கப்பட்டுள்ளன. நற்சிந்தனையில் பெரும்பகுதி பாடல்களாகும். மிகவும் சிறிய பகுதி உரைநடைப் பகுதிகளாகும். நற்சிந்தனையும் குருவின் அருள் மொழிகள் என்று தொகுக்கப்பட்ட சிறிய நூலும் கொண்டிராத சமயவுண்மைகள் இல்லை. வேதங்களையோ சமய சாத்திரங்களையோ கற்கவேண்டிய தேவையில்லை. நற்சிந்தனையைப் பொருள் விளங்கிப் பாராயணம் செய்து கொண்டால் அதைவிட வேறு தவம் இல்லை. சுவாமிகளின் காலத்திலே வாழ்ந்த திருவண்ணாமலை பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளையும் யோகர்சுவாமிகள் சென்று தரிசித்திருக்கிறார். இரு ஞானிகளும் ஒருவரோடு ஒருவர் அகரீதியாக உரையாடிக்கொண்டார்கள். யோகர்சுவாமிகளின் உபதேசமும் ரமண பகவானின் உபதேசமும் ஒன்றாகவே காணப்படுகின்றன. சகல ஜீவராசிகளுக்குள்ளும் மெய்ப்பொருளாக இருப்பது இறைவனே என்பதுதான் இவர்கள் அறைந்துவிட்டுச் சென்ற செய்தி.

வேத, ஆகம, தேவார, திருவாசக, திருக்குறள் கருத்துக்களை எல்லாம் யோகர்சுவாமிகள் தனக்கே உரியதான செந்தமிழ்ச் சொற்களால் நற்சிந்தனையில் பாடியிருக்கிறார். மேலோட்டமாகப் பார்ப்பவர்கள் அதனைப் புரிந்துகொள்ள மாட்டார்கள். பயபக்தியோடு ஆன்மலாபம் பெறும் பொருட்டு நற்சிந்தனையைப் பாடுபவர்கள் அதிலே அடங்கியிருக்கும் உட்பொருளைக் கண்டு வியக்கின்றார்கள். இதேபோன்றுதான் குருவின் அருள் மொழியில் காணப்படும் வாசகங்களும் அவை ஈடு இணை அற்றவை. பக்தி, கருமம், யோகம், ஞானம் என்பன நான்கும் சுவாமிகளினுடைய மொழிகளிலே புதைந்து கிடக்கின்றன. தனது குருவாகிய செல்லப்பா சுவாமிகளையே

---

*பார்ப்பதெல்லாம் சிவமாகப் பார், செய்வதெல்லாம் சிவ தொண்டாகச் செய், நானென்பதை விட்டு விடு.*

தமது பாடல்களிலே கசிந்துருகிப் பாடுகின்றார். நிதர்சனமாக தமது குருவை எம் மனக்கண் முன்னே நிறுத்துகின்றார். 'குரு தரிசனம்', 'கண்ட பத்து' போன்ற எத்தனையோ பல தலைப்புகளிலே தாவிக்கிடக்கும் வார்த்தைகளுக்கு ஈடு இணையில்லை. நல்லூர்க் கந்தனே சிவன் என்றும் அந்தச் சிவனே செல்லப்பன் (தமது குரு) என்றும் பாடித் தள்ளியிருக்கிறார். அவர் கூறும் அறக் கருத்துக்கள் எல்லாம் வேதக் கருத்துக்களே. நாட்டுப் பாடல்கள் போன்ற பாடல்களும், கர்நாடக இசையோடு கூடிய இசைப் பாடல்களும், விருத்தம், வெண்பா, குறட்பாக்களைக் கொண்ட பாடல்களும், மாணிக்கவாசக சுவாமிகள், தாயுமான சுவாமிகள் பாடிய முறையே திருவுந்தியார் மற்றும் பராபரக்கண்ணி போன்ற பாடல்களும் நற்சிந்தனையை பாராயணம் செய்வோரைக் கவரக்கூடியதாகவும் உள்ளது. இதே போன்றுதான் சுவாமிகள் தமது அடியார்களுக்கு அவ்வப்போது எழுதிய திருமுகங்களும் ஏனைய உரை நடைப் பகுதியும் இன்னதுதான், இவ்வளவுதான் என்று எடுத்துரைக்க முடியாதபடி ஆழமான பொருள் சுமந்து நிற்கின்றன. சுவாமிகளின் முதன்மையான சிஷ்யனாகிய மார்க்கண்டு சுவாமிகள் நற்சிந்தனையைத் தவிர வேறு ஏதும் நூல்களில் இருந்து தம்மை நாடி வந்த அடியார்க்கு எடுத்துரைத்ததாக தெரியவில்லை.

சுவாமிகள் அவ்வப்போது தமது அடியார்களுக்காக செய்த அற்புதங்களும் ஏராளம். அவர் சொன்ன வாக்குகள் தப்பவும் இல்லை. முன் பின் தெரியாதவர்களை அவர்களுடைய பெயரையே சொல்லி அழைப்பார். ஒரு முறை சுவாமிகள் ஒரு அடியவரோடு சிவனொளிபாதமலைக்குச் சென்றார். மலையின் அடிவாரத்திலே காரை நிறுத்திவிட்டு காரின் டிக்கிக்குள் இருந்த இடியப்பத்தையும் சொதியையும் அன்பர் இறக்க முற்பட்டார். அப்போது சுவாமிகள் எப்படி இவற்றைக் காவிக்கொண்டு ஏறுவது. வைத்துவிட்டுவா, வழியிலே பலகாரக்கடை இருக்கிறது, சாப்பிட்டு ரீயும் குடிக்கலாம் என்றார். அன்பருக்கோ பயம் வந்துவிட்டது. வழியிலே கடைகள் எதுவும் இல்லை என்று தெரிந்திருந்த அன்பர் சுவாமிகளுக்கு எதிர்க்கருத்து கூறமுடியாமல் சுவாமியோடு சென்ற பொழுது, பாண், ரொட்டி,

பலகாரங்கள், ரீ எல்லாம் உள்ள பெட்டிக் கடையையும் உரிமையாளரையும் கண்டு அடியார் வியந்தார். இருவருமாகச் சாப்பிட்டு மலைக்கு ஏறிவிட்டு திரும்பி வந்தார்கள். அப்பொழுதும் அந்தக் கடையில் சாப்பிட்டுவிட்டு வந்தார்கள். இது இப்படி இருந்தபோதும் அந்த அடியார் சந்தேகம் காரணமாக கடையிருந்த இடத்தை அடையாளம் வைத்துவிட்டு வந்தார். பின்பு ஓரிரு கிழமைகளுக்குப் பின்பு தனது நண்பர்களோடு அதே மலைக்குச் போனார். ஆனால் அங்கே கடையும் இல்லை கடைக்காரனும் இல்லை. சுவாமிகளினுடைய அற்புதச் சக்தியை உணர்ந்து மெய்சிலிர்த்துப் போனார். இவ்வகையாக பல பல அற்புதங்களால் அடியார் மனங்களைக் கொள்ளை கொண்டார் சுவாமிகள். இவ்வாறாக நாங்கள் பார்க்கிற பொழுது எம் மத்தியிலே வாழ்ந்து எம்மையும் வாழவைத்து ஆன்மீக வழிகாட்டிச் சென்ற குருவை நாம் மறக்கலாகாது. சைவ மக்களின் திருநீறும் உருத்திராக்கமும் பொலிந்து வாழவேண்டும் என்று வழிகாட்டினார் யோகர்சுவாமிகள். சுவாமிகள் இளைஞனாக இருக்கும் காலத்தில் சுவாமி விவேகானந்தர் யாழ் இந்துக் கல்லூரியில் உரையாற்றிய உரையை செவிமடுத்துக் கேட்டுள்ளார். பிற்காலத்தில் அந்தக் காட்சியை அடியவர்களுக்கு எடுத்துரைக்கும் போது விவேகானந்தர் ஒரு இளம் சிங்கம் போல் கர்ச்சித்தார் என்றார். மேடையில் நடந்தபடியே “காலமோ குறுகியது, விடயமோ பெரியது” என்று கர்ச்சித்து மேடையின் இடமிருந்து வலமும் வலமிருந்து இடமுமாக நடந்தபடியே பேசினார் என்றார். இதே விவேகானந்தர் குதிரை வண்டியிலே யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த போது, கொழும்புத்துறை இலுப்பைமரச் சந்தியடியிலே “இந்த இடம் பாலைவனத்திலே தோன்றும் பசுஞ்சோலை போல் குளிராக இருக்கிறதே” என்று கூறியும் இருக்கிறார். பிற்காலத்திலே யோகர்சுவாமிகளின் ஆச்சிரமக் குடிசையும் அந்தச் சந்தியிலேதான் அமைந்தது என்பதை எண்ணும்போது வியப்பாக இருக்கிறது.

நாம் எல்லோரும் யாழ்ப்பாணத்து முனிவர் தவத்திரு சிவயோக சுவாமிகளின் அருளைப் பெற்று ஆன்மீக ரீதியில் உய்தி பெறுவோமாக.

---

*துன்பம், நோய் யாவும் நன்மைக்கே வருகின்றன.*

# யோகர் சுவாமிகள்

செ. சோமசுந்தரம்
பொருளாளர், இந்து சமயப் பேரவை

எப்பவோ முடிந்த காரியம்
நாம் அறியோம்
ஒரு பொல்லாப்பும் இல்லை
முழுதும் உண்மை

யோகர் சுவாமிகள் அடிக்கடி சொல்லும் அமிர்த வாக்கியங்கள்.

ஆன்மீகமே மேலான பேரின்பம். யோகர் சுவாமிகளின் ஐம்பதாவது ஆண்டு மறைவை நினைவு கூர்வதே இக்கட்டுரை. நாம் நன்றியுடன் அப்பெரும் மகானை நினைப்பதுவும் நமக்கும் பெருமை தரும் செயலே. அன்பும் யோக சித்தியும் ஞான சித்தியும் ஒருங்கே அமையப்பெற்ற மகான். எமக்கு வழிகாட்டவென்றே அவதரித்த ஆன்மீகத் தலைவர். ஒழுக்க நெறியில் வாழ்ந்து அனைத்தும் துறந்த துறவி. அப்பரைப் போல் வீராப்புடன் வாழ்ந்த உத்தமர். மணிக்கணக்கில் தன்னை மறந்து இருப்பார். குரல் வளமும் சங்கீத ஞானமும் பெற்றவர் என்பதை அவரின் நற்சிந்தனைப் பாக்களே எடுத்துக்காட்டும். இன்றும் பலர் அவரைப் பிரார்த்தித்து மேலான வாழ்வை அடைந்து கொண்டே இருக்கிறார்கள். அவருக்கென்றே ஒரு கூட்டம் இன்றும் அமைந்திருப்பதைக் காணலாம். யோகர் சுவாமிகளால் ஸ்தாபிக்கப்பட்ட சிவ தொண்டன் நிலையத்தை மிக ஆர்வமுடன் பேணி வருகிறார்கள். பல தல யாத்திரைகளை மேற்கொண்டவர். பாதயாத்திரையின் உயர்வை நமக்கு உணர்த்திய மகான். ஒரே நேரத்தில் பல இடங்களில் தோற்றம் அளிப்பார். அவர் தாமே ஒரு இல்லத்திற்கு எழுந்தருளினால் ஏதோ ஒரு நற்பயன் நடந்தே தீரும்.

மிக அருமையான தத்துவங்களை மிக எளிதான உவமானங்கள் மூலம் விளக்குவார். அவரின் அறிவும் சிந்தனா சக்தியும் அளப்பரியது. சோப்பு கட்டிகள் போல் என்பார். சோப்பு கட்டிகள் எமது அழுக்கை நீக்கத் தேய்ந்து தன்னைத்தானே தியாகம் செய்கிறது. ஆனால் எம்மில் அழுக்கு

---

*நாம் முன்பு செய்த ஒரு செயலின் பின் விளைவே*
*நமது இன்றைய துன்பம்.*

மேலும் மேலும் படிந்து கொண்டேயிருக்கிறது என்பார். எட்டு வயதில் சீலை தோய்க்கவும், செம்பு மினுக்கவும் தொடங்கியவர்கள் எண்பதிலும் அதனைத்தானே செய்கிறார்கள் என்று குத்தாமல் குத்திக் காட்டுவார். வெளி வேடத்தில் வாழ்க்கையை முடித்துக் கொள்கிறார்கள் என்ற உள்ளக் குமுறலே இவ் வாக்கியங்கள். இவரின் சிறு வயதுகால வாழ்க்கை இருள் சூழ்ந்ததாகவே இருந்திருக்கின்றது. பத்து வயதிலேயே பெற்ற தாயை இழந்ததினால் தாய் அன்புக்கு ஏங்கியே இவரின் சிறு வயது கால வாழ்க்கை கழிந்து இருக்கிறது. சிறு வயதில் யோன் என்ற கிறீஸ்தவப் பெயருடன் கொழும்புத்துறையில் உள்ள ஒரு கத்தோலிக்க பாடசாலையிலும் பின் St. Patricks கல்லூரியிலும் கல்வி கற்றிருக்கிறார். பின் கிளிநொச்சியில் களஞ்சிய அறைக்காப்பாளராகப் (Store keeper) பணியாற்றித் துறவறத்தில் ஏற்பட்ட ஆர்வத்தினால் பார்த்த உத்தியோகத்தை உதறித்தள்ளினார். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் மூன்று பாசைகளிலும் தேர்ச்சி பெற்றவர். திருக்குறள், பைபிள் திருக்குரான் மூன்று நூல்களையும் திரும்பத் திரும்பப் படித்து மனப்பாடமே ஆக்கி விட்டார். சிறு வயதில் நல்லூர் முருகன் கோயிலில் அங்கப் பிரதிஸ்டை செய்வதில் ஆர்வமும் ஆசையும் நிறைந்தவர். இவர் வாழ்வின் முக்கிய அத்தியாயம் வேலைக்கு முழுக்குப் போட்டதில் இருந்தே தொடங்கியது.

குரு இல்லாச் சம்பிரதாயம் மேலும் இல்லை கீழும் இல்லை என்பதற்கிணங்க நல்லூர் தேர்முட்டி அடியில் இருந்தே செல்லப்பரை குருவாகப் பெற்றார். செல்லப்பரும் யாழ் கச்சேரியில் உயர்ந்த பதவியில் இருந்தவரே. அவரும் துறவற ஆர்வத்தினால் தன் உயர்ந்த பதவியை உதறித் தள்ளிவிட்டு வந்தவரே. செல்லப்பர் தனக்கு ஞானத்தை புகட்டிய முறையை அன்பு ஒழுக நினைவு கூர்வார். செல்லப்பர் தன்னை மறைத்துக் கொள்ளக் கொண்ட கோலமே இந்த விசர்க்கோலம். செல்லப்பர் தான் உண்பதற்கென்று பக்குவமாய் ருசியாய் ஆசையோடு சமைப்பார். குளித்து விட்டு வருவார். நல்ல ருசியான உணவுக்கு ஆசைப்படுகிறாயோ என்று தன்னைத் தானே கேட்டுவிட்டு தான்

---

*உண்மையான உயிர் இரக்கத்தோடு செய்யும் தயவுச் செயல்கள் மட்டுமே துன்பங்களை நீக்கும்*

விரும்பிச் சமைத்த உணவை தானே தன் காலால் இடறி உதைக்கும் சுபாவம் உடையவர். இதயத்தில் உள்ள குப்பை கூழங்களை அகற்றினால் அன்றி திருவருள் சக்தி வந்து படிவது எங்ஙனம் என்பார். இருவருக்கும் உள்ள வேறுபாடு செல்லப்பர் ஒரு போதும் உலகுடன் யாதொரு தொடர்பும் வைத்திருக்க வில்லை. அவரின் சீடரான யோகர்சுவாமிகளோ துறவை ஸ்திரப்படுத்தும்வரைதான் உலகுடன் தொடர்பற்றவராய் இருந்தார். துறவு கைகூடியதும் ஒட்டியும் ஒட்டாமலும் இருந்துகொண்டார். தன் குருவைப் பற்றி நற்சிந்தனையில் அவர் பாடியிருக்கும் பாக்களே அவரின் குரு பக்தியை வெளிக்காட்டி நிற்கிறது. என்னே அவரின் குருபக்தி.

செல்லப்பரின் மேனியும் அக்கினியில் பிரவேசமாகியது போல் தன் மேனியும் அக்கினியில் பிரவேசம் ஆக வேண்டும் என்று விரும்பியவர். யாழ்ப்பாணத்தில் ஜெகசோதியாக விளங்கிய யோகர் சுவாமிகள் 23-03-1964ம் ஆண்டு திங்கட்கிழமை இரவு 3 மணி 18 நிமிடத்தில் சிவபதம் அடைந்தார். இன, சமய வேறுபாடின்றி சுவாமிகள் சோதியுள் கலந்த வைபவத்தை தரிசித்தார்கள். அப்போது அந்த இடம் பூலோக கைலாயமாகக் காட்சியளித்தது.

தூயமனம், அடக்கம், அமைதி, பக்தி நிறைந்தவரும் எங்கள் இந்து சமயப் பேரவை தாபகரும் ஆகிய ஆத்மஜோதி முத்தையா சுவாமிகளும் யோகர் சுவாமிகள் மீது ஆறாக் காதல் பூண்டவர். யோகர்சுவாமிகளைத் தரிசிப்பதற்கென்றே நாவலப்பிட்டியில் இருந்து அடிக்கடி யாழ்ப்பாணம் வருவார். அவர் எழுதிய ‘என்னை எனக்கு அறிவித்த எங்கள் குரு நாதர்’ என்ற நூலில் யோகர் சுவாமிகளின் திருவிளையாடல் பற்றி மிகவும் சுவையாகக் குறிப்பிட்டுள்ளார். அவரே எங்கள் இந்து சமயப் பேரவை தாபகராய் இருப்பதுவும் இந்து சமயப் பேரவை வளர்ச்சிக்கு ஒரு முக்கிய காரணம் என்றே கூறலாம். முத்தையா சுவாமிகளின் சீடர் சிவ முத்துலிங்கம் அவர்கள் இன்று இந்து சமயப் பேரவையின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாய் இருக்கிறார்.

---

*சிந்தனை, சொல், செயல் இவைகளுக்கு இடையே எவ்வித வேறுபாடுகளும் இருக்கக் கூடாது.*

# கனடா சிவதொண்டன் நிலையம் தோற்றமும் வளர்ச்சியும்

சின்னையா சிவநேசன்
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி இளைப்பாறிய அதிபர்

ஈழத்துச் சித்தர் சிவயோக சுவாமிகளின் அடியார்கள் சிலர் மிட்லண்ட் /எக்லிண்டன் சந்திப்பிலுள்ள ஸ்காபரோ மத்திய சனசமூக நிலையத்திலுள்ள மண்டபத்தில் 1996 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஒரு சனிக்கிழமை பி.ப.3 மணியளவில் கூடினர். ஏற்கனவே பத்திரிகைச் செய்திகளைப் பார்த்த 30 பேர் அக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். முதலில் சுவாமிகளின் படத்தை வைத்து அவரது நற்சிந்தனைப் பாடல்கள் பாடி பூசையும் செய்தோம். பல அன்பர்கள் சுவாமிகளோடு தமக்கிருந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். ஈற்றில் ஒரு செயற்குழு தெரிவு செய்யப்பட்டது. இலங்கைப் புகையிரத நிலைய நடத்துனராகப் பணிபுரிந்து இளைப்பாறிய அமரர் திரு.நவரத்தினராஜா தலைவராகவும், அடியேன் செயலாள ராகவும், கொல்லங்கலட்டி அன்பர் திருநடராஜா பொருளாள ராகவும் தெரிவு செய்யப்பட்டோம். திருமதிகள் மீனா தவரத்தினம், நாகேஸ்வரி கணேஸ், திருவாளர்கள் கவிஞர் கந்தவனம், சிவசாமி, சிவானந்தன், லோகேஸ்வரன், சறகுணேந்திரன், அமரர் நவரத்தினம் ஆகியோர் செயற் குழு அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்

ஆரம்பத்தில் ஒவ்வொரு ஆயிலிய தினத்திலும் மார்க்கம் / எக்லிண்டன் சந்திப்பிலிருந்த ஒரு கடையின் நிலக்கீழறையில் சுவாமிகளின் படத்தை வைத்துப் பூசைகள் செய்து பிரசாதமும் வழங்கி வந்தோம். சில மாதங்களின் பின் 1997இல் நான் ரொறண்டோ கல்விச் சபையில் வேலை செய்த காலத்தில் வோபண் கல்லூரி வகுப்பொன்றை வாடகைக்கு எடுத்து மாத ஆயிலியத்தை சனிக்கிழமை பிற்பகலில் நடத்தி வந்தோம். பெரும்பாலான அன்பர்கள் அங்கத்தவர்களாகச் சேர்ந்தனர்.
1996 டிசெம்பர் மாதம் எமது நிலையத்தை ஒரு லாபநோக்கற்ற சங்கமாகப் பதிவு செய்தோம். 1997 ஆண்டில், யோகர் சுவாமிகளின் பிரதம சீடர்களுள் ஒருவராகிய, காவாய் ஆதீன முதல்வரும் தாபகருமாகிய, சிறீ சுப்பிரமுனிய சுவாமிகள்

(குருதேவர்), யோகர் சுவாமிகளின் வெண்கலச் சிலையொன்றைச் செய்வித்து அதனை உலகெங்கும் அனுப்பும் பணியை ஆரம்பித்து வைத்தார். குருதேவரை 1994 ஆம் ஆண்டு றிச்மண்ட்ஹில் ஆலயத்தில் நடைபெற்ற சைவ மகாநாட்டில் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அப்போது அவருக்கு உதவியாளராக இருந்த எனது மாணவன் தொண்டுநாதன் என்னை அவருக்கு அறிமுகஞ் செய்து வைத்தார். அதன் பின்னர் எமது நிலையம் ஹவாயுடன் தொடர்பு வைக்க ஆரம்பித்தது. சுவாமிகளின் திருஉருவச் சிலை அமெரிக்காவில் சுற்றுப்பயணம் முடித்தபின்னர் ரொன்ரோவுக்கு அனுப்பி வைக்கப்படும் என அவர்கள் அறிவித்தனர். எனவே கென்னடி / எக்ளிண்டன் சந்திப்பிலிருந்த வியாபார நிலையத் தொடர் மாடியில் ஒரு அறையை வாடகைக்கு எடுத்தோம். 1997 ஆகஸ்ட் மாதம் பியர்சன் விமான நிலையப் பொதிகள் பகுதிக்குச் சென்று சிலையைப் பாரமெடுத்தோம். புதிய இடத்தில் வைத்து நாடோறும் பூசைகள் நடாத்தினோம். ஏராளமான அன்பர்கள் வந்து வணங்கி நன்கொடையும் வழங்கினர்.

ரொன்ரோவிலுள்ள ஆலயங்களைத் தொடர்பு கொண்டு திருஉருவச் சிலையை அங்கு எடுத்துச் சென்று மக்கள் தரிசனத்துக்கு வைத்தோம். றிச்மொண்ட்ஹில் விநாயகர், வரசித்தி விநாயகர், நாகபூசணி அம்மன், துர்க்கேஸ்வரம், நோத்யோக் சிவன் ஆலயம் ஆகியவற்றில் ஓரிரு நாட்கள் வைத்து சொற்பொழிவுகள் பூசைகள் ஆகியன நடை பெற்றன. சிவயோக சுவாமிகளின் 125 ஆம் ஜனன ஆண்டை நினைவுகொள்ளும் முகமாகவே இச்சிலை செய்யப்பட்டு உலகவலம் வரவேண்டுமென குரு தேவர் விரும்பினார். ஈழப்போர் முடிந்த பின்னர் இது கொழும்புத்துறையிலுள்ள ஆச்சிரமத்தில் பிரதிஸ்டை செய்யப்படவேண்டும் எனப் பணித்தார். பல ஐரோப்பிய நாடுகளை எல்லாம் வலம் வந்த பின்னர் தற்போது அது எங்குள்ளது எனத் தெரியவில்லை.எனினும் இது பற்றிய விபரம் அறிய விரும்புவோர் ஹவாய் ஆதீனத்தோடு தொடர்புகொண்டு பெறலாம்.

சிவயோக சுவாமிகளின் 125 ஆம் ஜனன ஆண்டை ரொறண்டோவில் கொண்டாடும் முகமாகப் பல குழுக்களை அமைத்தோம். ஆயுள் காப்புறுதி வேல் வேலுப்பிள்ளை வோடன்

/ செப்பேட் சந்திப்பிலிருந்த தமது காரியாலயத்தில் ஓர் அறையை எமது அலுவலகமாகப் பாவிக்கும்படி இலவசமாகத் தந்தார். மறைந்த றிச்மண்ட்கில் ஆலய முன்னாள்த் தலைவர் சிவலிங்கம், தமிழர் தகவல் திருச்செல்வம், கவிஞர் கந்தவனம், லோகேந்திரலிங்கம் (உதயன்), செகா சிவராஜசிங்கம், மறைந்த நவரத்தினம், எமது செயற்குழு உறுப்பினர்களும் இன்னும் பல அன்பர்களும் தாமாகவே முன்வந்து பல அலுவல்களைப் பொறுப்பேற்றனர். பல அன்பர்களின் கட்டுரைகளைத் தொகுத்து 'சிவயோகம்' என்னும் நினைவு மலராக வெளியிடத் திருச்செல்வம் உதவினார்.

அற்லான்ரா மண்டபத்தில் இரண்டு நாட்களுக்கு, ஆகஸ்ட் 21ம், 22ம் திருஉருவச் சிலையை வைத்து கோலாகலமாக விழா நடைபெற்றது. பல முக்கிய பிரமுகர்கள் பேச்சாளர் களாகவும் பார்வையாளர்களாகவும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். குறிப்பிடத்தக்க இன்னுமொரு விடயம் சுவாமிகளின் பாண்டியந்தாழ்வைச் சேர்ந்த நெருங்கிய உறவினர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டனர். அற்லான்ரா மண்டப நிர்வாகிகளும் சுவாமிகளின் அடியார்கள் என்பதால் மண்டபத்தை இலவசமாகத் தந்து உதவினர். சில அன்பர்களின் உதவியால் சிற்றுண்டிகளும் நீராகாரமும் யாவருக்கும் இலவசமாக வழங்கப்பட்டன. பல பத்திரிகைகளும் வானொலிகளும் இந் நிகழ்ச்சியை முன் கூட்டியே அறிவித்து உதவினர்.

காரியாலய வாடகையைத் தொடர்ந்தும் கட்ட முடியாத நிலையில் மார்க்கம் வீதியிலிருந்த துர்க்கையம்மன் ஆலயத்தில் ஆயிலிய பூசைகளைத் தொடர்ந்து நடத்தினோம். சில மாதங்களின் பின்னர் இடையில் சேர்ந்த சில அன்பர்களின் மனஸ்தாபங்கள் காரணமாக அவர்கள் பிரிந்து சென்று ரக்சிடோகோட்டில் புதிய நிலையம் ஒன்றை ஆரம்பித்தனர். ஆரம்ப உறுப்பினர்கள் நல்லூர் முருகன் ஆலயத்தில் எமது பூசைகளை நடத்தி வந்தோம். 2006ஆம் ஆண்டில் எமது நிலையத்தின் 10ஆம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் முகமாக ஒரு நிதியுதவிக் கச்சேரி ஒன்றை கனடாக் கந்தசுவாமி ஆலய மண்டபத்தில் ஒழுங்கு செய்தோம். தமிழ் நாட்டின் மதுரையைச் சேர்ந்த இசைக் கலஞர் திரு. சுந்தரின் கச்சேரி

2006ஆம் ஆண்டு மேமாதம் 14ஆம் நாள் வெகு விமரிசையாக நடைபெற்றது. எமது உறுப்பினர்கள் பலர் நுழைவுச் சீட்டு விற்பனையில் பெரிதும் உதவினர். அதே மண்டபத்தில் பத்தாம் ஆண்டு விழாவை மே 22 ஆம் திகதி அன்று நடாத்தினோம். இந்நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக ஹாவாய் ஆதீன முதல்வர் வண போதிநாத வேலன் சுவாமிகள் கலந்து கொண்டு சிறப்பித்தார். சிறப்பு விருந்தினராக இலண்டனிலிருந்து வருகை தந்திருந்த ஈஸ்வரன் அவர்கள் சுவாமிகளை இறுதி நாட்களில் சக்கர நாற்காலியில் வைத்துத் தள்ளித் தொண்டு புரிந்த அன்பர். நாம் இவ்விழாவுக்காக நடத்திய மாணவருக்கான பேச்சுக் கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு அன்று சான்றிதழ்களும் பரிசில்களும் வழங்கினோம். சான்றிதழ்கள் ஹவாயில் விசேடமாக அச்சிடப்பட்டு எமக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அவ்வேளை அடியேன் தலைவராகவும், உப தலைவராக திருமதி யோகா கனகசுந்தரமும், செயலாளராக திரு.செகா செகராஜசிங்கமும், பொருளாளராக திருமதி லீலா சிவானந்தனும் பணியாற்றினோம். யோகர் சுவாமிகள் உண்மையான அடியார்களை அறிவதற்காகச் சோதனைகள் செய்கிறார்கள் போலும். மீண்டும் செயற்குழுவில் பிரச்சனைகள் தலைகாட்டின. இதனால் எம்மில் சிலர் நன்கு சிந்தித்து இரவிச்சந்திரனின் திருவடி நிலையத்திற்கு எமது படங்களையும் பிற பூசைப் பொருட்களையும் 2009 ஆம் ஆண்டு எடுத்துச் சென்றோம். தற்போது மிகவும் பக்தி பூர்வமாக யாவும் நடைபெறுகின்றன. சுவாமிகள் சமாதி அடைந்த 50ஆம் ஆண்டின் நிறைவை நினைவு கூரும் முகமாக 2014,ஏப்ரில் மாதம் 12 ஆம் நாள் சனிக்கிழமை, திருவடி நிலையத்தில், பிற்பகல் பல நிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப்படுகின்றன.முக்கியமாக சுவாமிகளின் ஞாபகார்த்த முத்திரை ஒன்றும் வெளியிடப் படவுள்ளது. அன்று ஹவாய் ஆதீன முதல்வர் வண போதிநாத வேலன் சுவாமிகள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்கிறார். அடியார்கள் இதில் பெருமளவில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கிறோம்..

எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்.

ஓம் நமசிவாய.

---

*பிராணனை அடக்கி ஆளுதல் வேண்டும்*

# சிவயோக சுவாமிகள் திருவெண்பா

திருமதி மீனா தவரட்ணம்
முன்னாள் ஆசிரியை, உரும்பிராய் இந்துக் கல்லூரி

கலாநிதி, கவிநாயகர் வி. கந்தவனம் அவர்கள் கனடா நாட்டில் இயங்கிவரும் பல சைவ சமய, கலை, கலாச்சாரப் பேரவைகளின் மதிப்பிற்குரிய போசகராகவும் ஆலோசகராகவும், இயக்குனராகவும் இருப்பது யாவரும் அறிவர். இவரின் கட்டுரைகள், கவிதைகள், புராண விளக்கங்கள், தனிநூல்கள் என்று பல்வேறு வகைப் படைப்புக்கள் பல சஞ்சிகைகள், வாரப் பத்திரிகைகள் மூலம் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கின்றன. படிப்போர்க்கு நல்ல விடயங்களையும், விளக்கங்களையும் தருகின்றன.

நூலாசிரியர், தவத்திரு யோகர் சுவாமிகளின் பக்தன். அவரைத் தன் குருநாதராக வணங்கிப் போற்றுபவர். அற்புதர்களின் வரலாறுகளையும், அவர்களின் அருமை பெருமைகளையும் எழுதுவதற்கு அவர்களின் தரிசனம், அருள் ஆசி, அனுபவம் முதலியன பெற்றிருக்கவேண்டும். அத்தகைய ஓர் தவப்பேறு இவருக்கு வாய்த்திருப்பது இவரின் திருவெண்பாக்கள் மூலம் புலனாகிறது.

தவத்திரு யோகர் சுவாமிகள் நம் ஈழநாடு தந்த ஒரு அரும்பெரும் தவப்புதல்வர். அவர் வாழ்ந்த காலத்தில் நம் நாட்டில் ஒற்றுமையும், சமாதானமும் அமைதியும் நிலவியது யாவரும் அறிந்ததே. அன்னாரின் குருபரம்பரை இன்று மேற்கு நாடுகளுக்கும் பரவிச் சைவசமயம் பேணிக் காக்கப்பட்டு வருகிறது என்பதை நாம் அறிவோம்.

நூலாசிரியரின் கவித்திறனும் ஆழமான தத்துவங்களை அற்புதமான முறையில் மிக எளிமையாக எழுதும் ஆற்றலும், படைப்புகள் சொல்வளமும், கருத்துச் செறிவும் கொண்டனவாக இருப்பதும் (wealth of thought and splendor of diction) மெச்சத்தக்கவை.

இவரின் இஷ்ட தெய்வமாகிய விநாயகப் பெருமானை முதற்கண் வணங்கி தன் படைப்பைப் புவியோர் புரிந்து படிக்க அருள்பாலிக்க வேண்டியிருப்பது, நமக்கும் தென்பு தந்து, இந்த அணிந்துரையைப் புரிந்தெழுத உதவியிருக்கிறது.

---

*சுகமும் துக்கமும் இரட்டைப் பிள்ளைகள்*

நூலாசிரியர் முதலிற் சுருக்கமாக யோகர்சுவாமிகளின் குடும்ப வரலாற்றையும், கற்ற கல்வி, புரிந்த தொழில் முதலியவற்றைக் குறிப்பிட்டபின், அவரின் அவதார நோக்கத்தை நிறைவு செய்ய எவ்வாறு தன்னைப் பக்குவப்படுத்திக்கொண்டார் என்பதையும் கூறியுள்ளார். ஞானகுரு செல்லப்பா சுவாமிகளிடம் நல்லூர்த் திருத்தலத்தில் ஞானதீட்சை பெற்று ஓர் வல்லபரானார். தன்னை அறிந்தார்; தன் நாமம் கெட்டார். சதாசிவன் சிவயோக மூர்த்தியாகிக் கொழும்புத்துறையில் இருந்த ஒரு குடில் புகுந்து தேடிவரும் அடியாரின் இடர்களைந்து, அறவழி காட்டி அருள் வழங்க முற்பட்டார்.

பரஞானம் பெறவேண்டின் நாம் சில பந்தபாசங்களையும், குண இயல்புகளையும் துறந்தாக வேண்டும் என்பதை இவ்விடத்தில் ஆசிரியர் மிகத்தெளிவாக வாசகர்களுக்குக் கூறியுள்ளார்.

யோகர்சுவாமிகள் தான் ஓதியதும், அடியார்களைத் தினம் ஓதவைத்ததும் மணிவாசகர் தந்த தேனிலும் இனிய 'சிவபுராணம்' என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதாகும். சிவபுராணம், தொல்லையிலும், பிறவி சூழும் தளைநீக்கி அல்லலறுத்து, ஆனந்தமாக்க வல்லது; கல்மனதையும் கரையவைத்து, அமைதி தரவல்ல அருமருந்து.

**வருவார் குணமும் மனநினைவும் எல்லாம்**
**தெரிவார் குருவும் தெரிந்து – விரைவாய்**
**உரிந்தும் அரிந்தும் பரிந்தும் உரிய**
**மருந்தை வழங்கிவிடு வார்.**

என்ற பதினோராம் திருப்பாடல் சுவாமிகள் எவ்வாறு வருவோரின் குணம், மனநிலை என்பவற்றை ஊடுருவி அறிந்து 'உரிந்தும், அரிந்தும், பரிந்தும்' உரிய மருந்தை வழங்கி நோய் தீர்த்த வைத்திய நாதனாக விளங்கினார் என்பதை வெளிப்படுத்துகிறது. யார் யாருக்கு எது தேவையோ அது வழங்கப்பட்டு அருள் பாலிக்கப்பட்டது.

அடுத்து, சுவாமிகளின் எளிமையான வாழ்க்கை முறையும், கைமாறு, பிரபல்யம் புகழ் வேண்டாத தன்மையையும் எடுத்துக் கூறி ஆன்மீக முதிர்ச்சிக்கு இது மிக முக்கியம் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது.

---

*அநியாயமாகச் சம்பாதித்த பொருள் நமக்குத் தராத துன்பத்தையே தரும்.*

அடியார்கள் அவப்பொழுதைத் தவப் பொழுதாக்கிக் கொள்ளத் தியான மண்டபம் அமைத்துத் தியானப் பயிற்சி கொடுத்து படிப்பதற்கு 'சிவ தொண்டன்' என்னும் ஆன்மீக இதழ் ஒன்றையும் அறிமுகம் செய்தார். இவைமூலம் மக்களைச் சிவப் பணிகளில் ஈடுபடுத்தினார்.

உண்மையான ஒரு சிவத்தொண்டனின் முக்கிய பண்புகள் எதுவாக அமைய வேண்டும் என்பதும் மிக ஆணித்தரமாக இங்கு வலியுறுத்தப்பட்டுள்ளது. திருநீறு பூசிய புனிதர்களாய், ஆசை அழுக்காறு அற்றவர்களாய், ஈசன் பணி செய்யும் தொண்டர்களாய், புகழ் வேண்டாது ஒற்றுமையுள்ளவர்களாய், அறவாழ்வு தாண்டாதவராய், கெட்ட செயல்கள் செய்யாதவராய் இருத்தல் வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

என்னை மிகக் கவர்ந்தது நூலாசிரியரின் 17வது திருப்பா. அந்தப்பாடல் இது:

**ஊதிக் குடிக்கும் ஒடியற்கூழ் போன்றுயர்ந்த**
**வேதக் கருத்துக்களை வெட்டியிட்டு – போதகுரு**
**நாதனார் காய்ச்சி அளித்தநற் சிந்தனையை**
**ஓதுவீர் கூடி உணர்ந்து.**

ஊதிக் குடிக்கும் ஒடியற் கூழ் யாழ்ப்பாண மக்களின் ஓர் எளிமையான விரும்பிக் குடிக்கும் சத்துணவு. இதைக் கூடிக் குடிப்பது ஒரு தனி இன்பம். அப்படி ஒரு கூழை சுவாமிகள் வேதக் கருத்துக்களை வெட்டிப்போட்டு காய்ச்சித் தந்துள்ளார். அதுவே 'நற்சிந்தனை' என்னும் பொக்கிஷம்.

கூழ் உடலுக்கு எப்படி ஒரு சத்துணவோ அதுபோன்று எமது ஆன்மாவுக்குச் சத்துணவாக அமைகிறது 'நற்சிந்தனை' என்னும் தெய்வீகக் கூழ். இதையும் கூழைப்போல் கூடிப்பாடுங்கள், பாராயணம் செய்யுங்கள் என்கிறார் நூலாசிரியர்.

சுவாமிகளும் நூலாசிரியர் போன்று எளிய தமிழில் அரிய கருத்துக்களை இனிய நடையில் பாமர மக்களும் பாடி விளங்கிக்கொள்ளப் பாடி அருளியுள்ளார். இவற்றைப் பக்தியோடு பாராயணம் செய்யுங்கால் ஆணவம் நீங்கி அல்லல் அறுந்து ஆனந்தம்

---

*வயது முதிர்ந்த பெற்றோரை தன்னுயிராகக் கருதிப் போற்றிப் பேணிப் பாதுகாக்க வேண்டும்.*

அமைதி தந்து சிவஞானம் கை கூடும் என்பது உறுதி.

'ஒரு பொல்லாப்புமில்லை', 'முழுவதும் உண்மை', 'எப்பவோ முடிந்த காரியம், 'யாமறியோம்' என்னும் மகா வாக்கியங்களை விளங்கி உணர்வோர்க்கு நற்கதியுண்டாகும் என்றும் கூறப்பட்டுள்ளது.

அட்டமா சித்திகள் அனைத்தும் சுவாமிகளுக்குக் கை வந்தபோதும் அவற்றை அவர் ஒருபோதும் வெளிக்காட்டவில்லை. அவரின் அணுக்கத் தொண்டர் சிலரே தம் பக்குவநிலையால் அவற்றைக் கண்டறிந்து அனுபவித்தனர். "The apparel oft proclaims the man" என்பது சேக்ஸ்பியர் கூற்று. சுவாமிகளின் வெள்ளை வேட்டியும், வெள்ளைச் சால்வையும், வெண்தாடியும் அவரின் உள்ளத் தூய்மையையும் எளிமையையும் எடுத்துக் காட்டின.

நூலாசிரியர் தன் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட குரு மணியைத் தன் சற்குருவாய் உள்ளக் கோயிலில் உறையும்படி இரங்குவது நம் உள்ளத்தை உருக்குகின்றது, மெய் சிலிர்க்க வைக்கிறது.

அடுத்து வரும் பாடல் சுவாமிகளின் புகழ்பூத்த உலகம் போற்றும் உத்தம சீடரான குருதேவர் சிவாய சுப்பிரமுனியர் பற்றியது. இவரின் பெருமை ஈசனாலன்றி எவராலும் பேச முடியாதது. தனது சற்குருவின் அருமை பெருமைகளை உலகறியச் செய்த பெருமை இவரைச் சாரும். அவர்தன் குருவின் கட்டளைகளை சிரமேற் கொண்டு பல ஆலயங்கள் அமைத்துப் போதனைகள் செய்து 'இந்து நாள் இதழ்' (Hinduism To-day) என்னும் உலகப் பிரசித்தி பெற்ற சஞ்சிகையை வெளியிட்டு, பல ஆன்மீக நூல்களை எழுதி, திருப்பணிகள் பல செய்து, உலக சமாதானத்தின் சிற்பியாகவும் கௌரவம் பெற்றார். அவரின் நினைவாலயமாகவும் உலக மக்கள் தரிசிக்க வல்ல அற்புத யாத்திரைத் தலமாகவும் விளங்குவன காவாய் ஆதீனமும், உருவாகிவரும் இறைவன் கோயிலுமாகும்.

குருதேவரின் மகாசமாதியின்பின் இவரின் திருப்பணிகளை தற்போதய காவாய் பீடாதிபதியும் சற்குருவுமான போதிநாத வேலன் சுவாமிகள் திறம்படத் தொடர்ந்தாற்றி வருகிறார். யோகர் சுவாமிகளின் குருபரம்பரை என்றும் சீரும் சிறப்புடனும் இயங்கும் என்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இறுதியாக நூற்பயன் கூறும் கவிஞர் இத்திருப்பாக்களைப் பக்தியுடன் பாராயணம் செய்வோர், தீவினை நீங்கி, நல்வினை ஓங்கி

---

*எல்லாவற்றையும் கடவுள் அறிவிப்பார். நாங்கள் ஒரு ஆலோசனையும் பண்ணத் தேவையில்லை.*

வீடுபேற்றைப் பெறுவார் என உறுதி தந்துள்ளார்.

இத்திருப்பாக்கள் யாவும் நித்திய பாராயணத்திற்குரியவை, படிக்கப் படிக்க பக்குவம் அளிக்கவல்லவை. இத்தகைய ஓர் பாடல்த் தொகுதியை யாத்துத் தந்த கவிஞர் அவர்களை உளமார வாழ்த்தி வணங்கி நன்றி கூறி அவர்தம் சிவப்பணி மேன்மேலும் தொடர எல்லாம் வல்ல சிவப்பரம் பொருளின் திருவருளையும் தவத்திரு யோகர் சுவாமிகளின் குருவருளையும் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் நமச்சிவாய.

---

## 2012 தை மாதம் தொடக்கம் ஆத்மஜோதி சஞ்சிகை தொடர்ந்து வெளிவருவதற்கு வருடந்தோறும் நிரந்தர நிதி உதவி வழங்குவோர்

| | |
|---|---|
| திரு. செல்லத்துரை சோமசுந்தரம் | $ 200.00 |
| செல்வன். மனோகாந்தன் விசாகன் | $ 200.00 |
| செல்வன் மனோகாந்தன் யாதவன் | $ 200.00 |
| திரு. விநாயகர் கந்தவனம் | $ 200.00 |
| திரு. வடிவேலு உமாகாந்தன் | $ 200.00 |
| திருமதி இராசமலர் சின்னராஜா | $ 200.00 |
| திரு. வடிவேலு ஞானகாந்தன் | $ 200.00 |
| திருமதி ஸ்ரீரங்கநாயகி சபாரத்தினம் | $ 200.00 |
| திரு. நிமலகாந்தன் யசோதநாயகி | $ 200.00 |
| திருமதி. கோகிலாம்பாள் கனகசபாபதி | $ 200.00 |
| திரு. ம. வரதகுமார் | $ 600.00 |
| திரு. சு. சிவபரமானந்தம் | $ 200.00 |
| திரு. செல்வா இராஜதுரை | $ 200.00 |
| திருமதி. அன்னபூரணம் ஞானசம்பந்தர் | $ 200.00 |
| திருமதி வேந்தினி ஈஸ்வரமூர்த்தி | $200.00 |
| திருமதி தங்கமுத்து தம்பித்துரை | $200.00 |
| திரு. ஆறுமுகம் சரவணமுத்து | $200.00 |

---

*எந்த வீட்டில் தினமும் ஆதரவற்றோர், விருந்தினர், அயலவர் யாராவது வந்து உண்டு பசியாறுவதுண்டோ அந்த வீட்டுக்கு எந்தக் குறையும் வராது.*

## *Sivayoga Swamikal was once met by the Peradeniya university students*

T.Sivayogapathy.(Siva)

Sivayoga Swamikal was once met by the Peradeniya university students and when they asked what Swamikal wished to tell them in response HE sang the following song:
{I was inspired to translate into English.}

---

ஒழுக்கம் விழுப்பம் தரும் தம்பிமாரே
ஓமென்று சிந்தை செய்வீர் தம்பிமாரே
Character that bears goodness brings greatness, O youngsters
Immerse thy mind in the chanting of AUM, O youngsters

அழுக்காறு அவா வெகுளி தம்பிமாரே
ஆன்மாவைப் பந்திக்கும் தம்பிமாரே
Envy greed and anger, O youngsters
Bind thy spirit, O youngsters

வழுக்கி விழுந்தாலும் தம்பிமாரே
மலரடியைச் சிந்தை செய்வீர் தம்பிமாரே
Even thee err and fail, O youngsters
Fasten thy mind on the Lotus feet, O youngsters

பழுத்த வடியருடன் தம்பிமாரே
பாடிப் பணிய வேண்டும் தம்பிமாரே
Mingling with bloomy devotees O youngsters
Recite prayers and pay obeisance, O youngsters

மூப்பு வந்தடையு முன்னே தம்பிமாரே
முழுதும் அறிய வேண்டும் தம்பிமாரே
Before old age sets in, O youngsters
Grasp that knowledge, which matters, in full, O youngsters

---

*இல்லறம் துறவறம் இரண்டும் மேன்மையே.*

நாப்பிளக்கப் பொய்யுரைத்துத் தம்பிமாரே
நாட்டிற் பொருள் தேட வேண்டாம் தம்பிமாரே
Uttering lies with tongue unchecked, O youngsters
Do not pursue for wealth in thy country, O youngsters

ஆதியந்தம் நமக்கில்லைத் தம்பிமாரே
ஆன்மாவே நாங்கள் காணும் தம்பிமாரே
Beginning and end, not for us, O youngsters
We, the spirit indeed, knoweth, O youngsters

ஓதியுணர வேண்டும் தம்பிமாரே
உய்யவழி யதுகாணுந் தம்பிமாரே
Learn the scriptures and realize, O youngsters
That indeed, is the way for redemption, O youngsters

சாதி சமய பேதந் தம்பிமாரே
சங்கற்பமென்றறிவீர் தம்பிமாரே
Cast religion at variance, O youngsters
Is fallacy of the human mind, know this, O youngsters

வாழி வாழி சிவன் நாமந் தம்பிமாரே
மனசாரச் சொல்லுங்கள் தம்பிமாரே
Hail O Hail, the Lord's name, O youngsters
Recite in earnest with feeling, O youngsters

வாழி சிவனடியார்கள் தம்பிமாரே
மன்னவனுஞ் செங்கோலுந் தம்பிமாரே
Hail, O the devotees of the Lord O youngsters
Thus the king and the rule that is righteous, O youngsters

---

*தாழ்ந்த இடத்தில் தண்ணீர் போய் நிற்கிறது. அப்படியே நீங்களும் கீழ்ப்படிவுள்ளவர்களாயிருங்கள்*

*எங்களுடைய பிள்ளைகளுக்கு சமய அறிவு வேணுமென்ற ஆசையிருந்தால் அது கட்டாயம் வரும்.*

# இந்திய திருத்தல யாத்திரை - 2013
## (பாகம் - 2)

திருமுறைச் செல்வர் சிவ. முத்துலிங்கம்

கனடா இந்துசமயப் பேரவைத் திருக்கூட்டத்தினர் ஐந்து முறை இந்தியாவுக்கு திருத்தல யாத்திரை சென்றுள்ளனர். 2003, 2005, 2007, 2010 ஆகிய ஆண்டுகளில் திருத்தல யாத்திரை மேற்கொண்ட திருக்கூட்டத்தினர் 2013ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 12ஆம் திகதி திருத்தல யாத்திரையை மேற்கொண்டனர். ஆத்மஜோதி டிசம்பர் சஞ்சிகையில் ஏற்கனவே ஒரு கட்டுரை பிரசுரமாகியுள்ளது. இரண்டாவது பாகமாக இக்கட்டுரை எழுதப்படுகிறது.

16-11-2013 இல் திருவண்ணாமலை திருக்கார்த்திகை தீப தரிசனத்தைப் பெறுவதற்காக நாம் சிதம்பரத்திலேயிருந்து ஒழுங்கு செய்து வைத்திருந்த பேரூந்தில் எங்கள் யாத்திரையைத் தொடர்ந்தோம். எங்கள் உதவியாளர்களாகிய வீ. சந்திரசேகரன் குழுவினரும் எங்களுடன் இணைந்தனர். வண்டியில் நாம் பயணிக்கும் பொழுது தேவார திருவாசக பாராயணங்களுடனும், சிவநாம சங்கீர்த்தனத்துடனும் எங்கள் யாத்திரையைத் தொடர்ந்தோம். திருவண்ணாமலைக்கு 16ஆம் திகதி மாலை சென்றடைந்தோம். கார்த்திகை மாதம் மாரிகாலமாகையால் பலத்த மழை பெய்துகொண்டிருந்தது. பலத்த மழைக்கு மத்தியிலும் மறுநாள் நடைபெற இருந்த கார்த்திகைத் தீப தரிசனத்தைப் பார்ப்பதற்காக பல இலட்சம் பக்தர்கள் கூடியிருந்தனர். நாம் எமது இருப்பிடத்தில் இளைப்பாறியபின் மறுநாள் அதிகாலை நான்கு மணிக்கே அண்ணாமலையைக் கிரிவலம் வருவதற்காகப் புறப்பட்டோம்.

ஆலயத்தின் கிழக்குக் கோபுர வாசலில் இருந்து எமது கிரிவலம் ஆரம்பித்தது. அந்த அதிகாலை வேளையிலும் பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் கிரிவலம் வருவதற்கு தயாராகிக் கொண்டிருந்தனர். நினைத்தாலே முக்தி தரும் அண்ணாமலையான் பக்தியுடன் வழிபடுபவர்களின் வினைகள் யாவற்றையும் நீக்கி விடுவார் என்பது பக்தர்களின் நம்பிக்கையாகும்.

---

*முகமனுக்காக ஒன்றும் செய்யக்கூடாது.*

கிரிவலத்தில் நாம் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியும் ஆயிரம் அசுவமேத யாகம் செய்த பலனைத் தருமென்று கூறுவர்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் மூன்றாலும் சிறப்புப் பெற்ற இத்தலம் பஞ்சபூதத் தலங்களில் அக்கினித் தலமாக விளங்குகிறது. திருவண்ணாமலை ஒரு புண்ணிய பூமி, புனித பூமி, ஞான பூமி. சகல ஆத்மீக சிறப்புக்களும் கொண்ட பூமி. தேவாம்சம் கொண்ட ஞானிகள், சித்தர்கள், மகான்கள், யோகிகள் வாழ்ந்த வாழுகின்ற பூமி. கிரிவலத்தின் போது ஜீவன் முக்தி அடைந்த சித்தர்கள் சூக்கும நிலையில் எழுந்தருளி கிரிவலம் வரும் பக்தர்களுக்கு அருள் புரிவர் என்று கூறுவர். திருப்புகழ் பாடிய அருணகிரிநாதர் பிறந்து வாழ்ந்த புண்ணிய பூமி.

கிரிவலப் பாதையில் அண்மையில் வாழ்ந்து மறைந்த சேஷாஸ்திரி சுவாமிகள், ரமண மகரிஷி, யோகி ராம் சுரத்குமார் ஆகியோரின் சமாதி ஆலயங்களும், ஆச்சிரமங்களும் இடம் பெற்றுள்ளது. பக்தர்கள் கிரிவலம் வரும் பொழுது எலுமிச்சம் பழத்தை கையில் வைத்துக்கொண்டு வலம் வர வேண்டும் என்றும், பின்னர் அப் பழத்தை அவர்களின் பூசை அறையில் வைக்க வேண்டும் என்றும், அப்படிச் செய்வது அக் குடும்பத்திற்கு நல்வாழ்வை அளிக்கும் என்றும் கூறுவர். அடி முடி காணப் புறப்பட்ட பிரமாவுக்கும், விஷ்ணுவுக்கும் அக்கினி வடிவமாய் சிவபெருமான் வியாபித்து நின்ற திருத்தலம் திருவண்ணாமலை ஆகும். அக்கினி வடிவாய் வியாபித்து நின்ற ஒளிப்பிழம்பே திருவண்ணாமலையாகக் காட்சி அளிக்கின்றது என்பது ஐதீகம்.

ஆதியும், அந்தமும் இல்லாத அரும்பெரும் ஜோதி வடிவமே சிவ வடிவம் என்பதை எடுத்துக்காட்டும் திருத்தலம் திருவண்ணாமலையாகும். ஞானியரை என்றும் தன்பால் ஈர்த்தருளும் சிவ ஞான மலையாக இந்த அண்ணாமலை திகழுகின்றது. தன்னை ஈர்த்த அண்ணாமலையை எந்த நேரமும் பார்த்தபடி ரமண பகவான் வீற்றிருப்பார் எனக் கூறுவர். தன் பக்தர்களுடன் தினமும் கிரிவலம் வரும் பழக்கத்தை ரமண பகவான் மேற்கொண்டிருந்தவர். அவர் பக்தர்களுடன் கிரிவலம்

---

*உலகில் தாமரை இலையும் தண்ணீரும் போல வாழவேண்டும்.*

வரும் பொழுது அவர்களுக்கு முன்னால் சித்தர்களும், ஞானிகளும் ஆரவாரத்துடன் சூக்கும நிலையில் முன்செல்வர். அக்காட்சி ரமண பகவானின் கண்களுக்குப் புலப்படும். கூடிவரும் பக்தர்களுக்கு ரமணர் கூறும் பொழுது சிலரின் கண்களுக்குப் புலப்படும்.

ஒரு பித்தரைப் போல வாழ்ந்து மறைந்த சேஷாஸ்திரி சுவாமிகள் ஒரு நாளைக்கு ஐந்து முறை மலையைச் சுற்றி கிரிவலம் வருவார். கிரிவலப்பாதை பதின்னான்கு கிலோ மீட்டர் தூரம் கொண்டது. இத் தலத்திற்கு அருணகிரி, அருணாசலம், அருணமலை, சோணாசலம் என்று பல பெயர்கள் உண்டு. திருவண்ணாமலையில் முன்நூற்று அறுபது வகையான தீர்த்தங்களுள்ளன. சூரிய உதயத்தின் பொழுது இம் மலை மீது சூரியக் கதிர்கள் விழுகின்றன. அப்போது அண்ணாமலை நெருப்பு மலை போல் தோற்றமளிக்கும். கிரிவலம் செய்பவர்களின் துன்பங்கள் நீங்கி அவர்களுக்கு நல்வாழ்வு கிட்டும் என்று கூறுவர். கிரிவலப் பாதையில் உள்ள அட்டலிங்க தரிசனம் சகல பேறுகளையும் அளிக்கும் என்று கூறுவர். அட்டலிங்கங்களாவன, இந்திரலிங்கம், அக்கினிலிங்கம், எம லிங்கம், நிருதிலிங்கம், வருணலிங்கம், வாயுலிங்கம், குபேரலிங்கம், ஈசானிய லிங்கம் ஆகியனவாகும்.

**இந்திரலிங்கம்**

இந்திரலிங்கம் கிரிவலப் பாதையில் கிழக்குத் திசையில் உள்ளது. கிரிவலத்தில் முதலில் தரிசனம் தருபவர் இந்திர லிங்கம் ஆவார். இவரை வழிபாடு செய்வதால் செல்வம் கொழிக்கும்.

**அக்கினி லிங்கம்**

கிரிவலப் பாதையில் தென்கிழக்குத் திசையில் வலதுபக்கம் உள்ளவர் அக்கினி லிங்கம் ஆவார். இவரை வழிபடுவதால் நோய், பயம் நீங்கும்

**எமலிங்கம்**

கிரிவலப் பாதையில் தெற்குத் திசையில் உள்ளவர்

எமலிங்கம் ஆவார். இந்த லிங்கத்தை வழிபடுவதால் அனைத்துத் துன்பங்களும் நீங்கும்.

**நிருதிலிங்கம்**

கிரிவலப் பாதையில் தென்மேற்குத் திசையில் உள்ளவர் நிருதிலிங்கம் ஆவார். புத்திர பாக்கியம் இல்லாதோர்க்குப் புத்திர பாக்கியம் இந்த லிங்கத்தை வழிபடுவோருக்கு அளிப்பர் எனக் கூறுவர்.

**வருணலிங்கம்**

கிரிவலப் பாதையில் மேற்குத் திசையில் உள்ளவர் வருணலிங்கம் ஆவார். இந்த லிங்கத்தை வழிபட்டால் கொடிய நோய்கள் நீங்கும்.

**வாயுலிங்கம்**

கிரிவலப் பாதையில் வடமேற்குத் திசையில் வாயுலிங்கம் அமைந்துள்ளார். இந்த லிங்கத்தை வழிபடுவதால் கண்திருஷ்டி நீங்கும்.

**குபேரலிங்கம்**

கிரிவலப்பாதையில் வடக்குத் திசையில் குபேரலிங்கம் வீற்றிருக்கிறார். இவரை வழிபாடு செய்வதால் செல்வம் பெருகும்.

**ஈசானியலிங்கம்**

கிரிவலப் பாதையில் வட கிழக்குத் திசையில் அமைந்துள்ளவர் ஈசானியலிங்கம் ஆவார். இவர் இறை உணர்வு எய்த வழி காட்டுவதுடன் பக்தர்களை பக்தி மார்க்கத்தில் மேலும் மேலும் ஈடுபடுவதற்கு உந்து சக்தியாக இருப்பவர் என்று கூறுவர்.

அட்ட லிங்கங்களைத் தரிசித்து பக்தியுடன் வணங்கினால் சகல நலன்களும் பெருகும் என்று தல புராணம் கூறுகிறது. கிரிவலப் பாதையிலே நடு நாயகமாக அடி அண்ணாமலை ஆலயம் எழுந்தருளியுள்ளது. இவ்வாலயம்தான் ஆதியில் தோன்றிய அண்ணாமலை ஆலயம் என்று கூறுவர். இவர்

---

*பிற உயிரைத் துன்புறுத்துவது நம்மை நாமே துன்புறுத்திக் கொள்வதாகும்.*

சுயம்புலிங்கம் ஆவார். கிரிவலம் செல்லும் பக்தர்கள் அடி அண்ணாமலையானைத் தரிசிக்கத் தவறுவதில்லை. அடி அண்ணாமலைக்குச் செல்லும் வழியில் மணிவாசகப் பெருமானுக்கு ஆலயம் ஒன்று அமைந்துள்ளது. மணிவாசகர் இந்த ஆலயத்தில் தான் பர்ண சாலை அமைத்து தங்கியிருந்து அண்ணாமலையானை வழிபட்டார் என்று கூறுவர். இந்தப் பர்ணசாலையில் இருந்து திருவாசகத்தில் இடம்பெறும் திருவெம்பாவை, திருவம்மானை போன்ற பதிகங்களைப் பாடினார்.

இருபது இலட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் திருக்கார்த்திகை தீப தரிசனத்திலே கலந்து கொண்டார்கள். பக்தியுடனும், சிறு குழந்தைகளைச் சுமந்த வண்ணமும் சிறார்களைக் கையில் பிடித்து அழைத்துக் கொண்டும் பக்தியுடன் அண்ணாமலையானை நெஞ்சில் நிறுத்தி பஞ்சாட்சரத்தை ஜெபித்துக் கொண்டு பக்தர்கள் கிரிவலம் வரும் அழகே தனி அழகாகும். காவி உடை அணிந்த சாதுக்களும், சன்னியாசிகளும், கிரிவலம் வருவதும், கிரிவலப் பாதையில் வீற்றிருப்பதும் எமக்கு வாழ்க்கை நிலையாமையை உணர்த்தும். பாமர மக்கள் தங்கள் வறுமையினால் யாசிக்கும் தொழிலையும் கிரிவலப் பாதையில் மேற்கொள்வர். கிரிவலத்தின் பொழுது தர்மம் செய்வது நற்பலனை அளிக்கும் என்று கூறுவர். நாமும் எம்மால் முடிந்தளவுக்கு ஏழைகளுக்கும், சாதுக்களுக்கும் நிதியை அளித்தோம்.

கண்பார்வையற்ற அந்தகர்கள் ஒருவரை ஒருவர் கைகோர்த்தபடி மூன்று, ஐந்து குழுவினராக பக்திப் பாடல்களைப் படித்தபடியும், அண்ணாமலையானின் கோசங்களை எழுப்பிய படியும் யாசகம் பண்ணுங் காட்சி கிரிவலம் வரும் பக்தர்களின் மனதினை உருக்கும் காட்சியாகும். கிரிவலப் பாதையில் இருமருங்கிலும் தற்காலிக வியாபார அங்காடிகள் இடம்பெறும். அன்னதானப் பொட்டலங்களை ஆயிரக் கணக்காக வைத்திருந்து பக்தர்களின் பசியை ஆற்றுவதற்கு கொடுத்துக் கொண்டேயிருப்பார்கள். நாமும் எமது பேரவையின் திருக்கூட்டத்தினர் சார்பில் நாம் தங்கியிருந்த மடத்தில் இருந்து

---

*என்றும் சத்தியத்தை மறவாது இருந்தால் எப்போதும் நிம்மதி நிலைக்கும்*

ஆயிரம் உணவுப் பொட்டலங்களைச் செய்வித்து கிரிவலம் வரும் பக்தர்களுக்கு பரிமாறியிருந்தோம்.

மாலையில் மலை உச்சியில் நெய்த்தீபம் ஏற்றும் காட்சியும், தீபம் எரியும் பொழுது அந்தத் தீப ஒளியில் உள்ள அருள் வீச்சும் பக்தர்களின் பக்திப் பிரவாகமும் அண்ணாமலை நகரையே மூழ்கடித்துவிடும். சைவத்தமிழர்களாகிய நாம் எங்கள் வாழ்வில் ஒருதரமாவது அண்ணாமலையானின் திருக்கார்த்திகை தீப தரிசனத்தைக் காண வேண்டும். கண்டு எங்கள் பிறவிப் பிணியை நீக்க வேண்டும் என்பதே அடியேனின் கருத்தாகும்.

பஞ்ச பூதத்தலங்களில் மிகவும் சக்தி வாய்ந்தவர் அண்ணாமலையான் என்பது வெள்ளிடை மலையாகும். அண்ணாமலையானின் அருட்சக்தியை அனுபவித்தவர்கள் தான் உணரமுடியும். நாம் கடந்த ஐந்து முறை திருத்தல யாத்திரை சென்று அண்ணாமலையானின் தரிசனத்தைப் பெற்றதால் அதன் பெறுபேறுகளை உணரக்கூடியதாகவுள்ளது.

(தொடரும்)

**கோவை தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகள் சர்வதேச தர்ம பரிபாலன அறக்கட்டளைக்கு வாரி வழங்குங்கள்**

**ஆதீன விலாசம்:**

கோவை தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகள்
இராமலிங்க வள்ளலார் சர்வதேச தரும பரிபாலன அறக்கட்டளை
மேட்டுக்குப்பம் 807802 (நெய்வேலி வழி கடலூர் மாவட்டம்



ஆதீனத் தொலைபேசி இலக்கம்: 04142-645484
கைத்தொலைபேசி இலக்கம்: 9443359245

அனாதரவான சிறார்களையும், ஆதரவற்ற முதியோர்களையும் பராபரிக்கும் தர்ம ஸ்தாபனமான நிறுவனத்திற்கு நன்கொடை அளித்து உதவி செய்யுங்கள்.

நடக்கமுடியாத நிலையில் படுக்கையில் படுத்தபடி நிறுவனத்தைப் பரிபாலிக்கும் மகா ஞானியான கோவை தவத்திரு சிவப்பிரகாச சுவாமிகளின் தன்னிகரில்லா தன்நலம் அற்ற சேவைக்கு நிதி உதவி செய்து சுவாமிகளின் சுமையை குறைத்து அருளாசிகளைக் பெறுவீர்களாக!

# திருமந்திரத்தில் அரசாட்சி முறை

முனைவர் இரா. தமிழ்ச்செல்வம்
எம். ஏ., எம். பில., எம். எட்., பி. எச். டி
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை, அரசு கலைக் கல்லூரி, சிதம்பரம்

சென்ற இதழ் தொடர்ச்சி

**துறவோர் பேணல்:**

அறவோரைக் காத்தலும், அந்தணர் ஓம்பலும், துறவோர் பேணலும் அரசனின் தலையாய கடமையாகும். இம் மூவரும் அவரவர் நெறியில் ஒழுகுதல் நாட்டிற்கு நலத்தைத் தரும். திருமந்திரம் துறவோரைப் பேணுதல் அரசனுக்குரிய மிகப் பெரிய கடமையாகக் குறிப்பிடுகின்றது. திருமூலர் சித்தர், சிவனை சித்தத்தில் கொண்டவர். ஆதலின் சிவக்கோலத் தவசிகள் தத்தம் நெறியில் ஒழுக மன்னன் வழிவகை செய்ய வற்புறுத்து கின்றார். "நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே" (புறம்: 312) என்ற புறநானூற்றுப் பாடல் வரி இங்கு ஒப்பு நோக்குதற் குரியதாகும். உண்மைத் தவக்கோலமும், உண்மைத் தவமும் மட்டுமே நாட்டையும், நாட்டு மக்களையும் காப்பாற்றும் என்கிறார். திருமூலர் 'உண்மைத் துறவு' என்று பிரித்து உரைப்பதன் நோக்கம் யான், எனது என்னும் செருக்கை அறுக்கும் போது ஆணவம் அழியும், ஆணவம் அழித்தோரே உண்மைத் துறவி ஆவார். துறவி வேடம் பூண்டவர் துறவிகட்குரிய ஒழுக்கத்தில் நில்லாராயின் வேடத்தால் பயன் இல்லை. வன்மை மிக்க மன்னன் அவர்களை வேடநெறியில் ஒழுகுமாறு செய்தால் அரசனும் வீடு பேறு அடைவான். வேடம் பூண்டவரும் வீடு பேறு அடைவர். இதனை,

வேட நெறி நில்லார் வேடம் பூண் டென் பயன்
வேட நெறி நிற்போர் வேடம் மெய் வேடமே
வேட நெறி நில்லார் தம்மை விறல் வேந்தன்
வேட நெறி செய்தால் வீடது வாகுமே.

திருமந்திரம் - 240

இப்பாடலால் அறியலாம்.

**போலித் துறவிகளைத் துண்டித்தல்:**

சமயப் போர்வையில் நாட்டில் உலா வரும் போலித்

துறவிகளை அடையாளங்கண்டு அவர்களைத் தண்டிப்பதும் அரசனுடைய கடமையாகும். உச்சிக் குடுமியும், பூணூலும், காவியுடையும் மட்டும் உண்மையான துறவாகாது. தொன்று தொட்டு இன்று வரை போலி வேடதாரிகளால் இவ்உலகும், உலக மக்களும் வாடி வதங்கி வருகின்றனர். போலித் துறவிகளை நம்மில் சிலர் மெய்த்தவசி என்று நம்பித் தானம் செய்கின்றனர். அவர் ஈந்த பொருள் நல்வழிகளில் செலவாகாமல் தீய வழிகளில் செலவிடப்படுவதால் தானம் செய்தவருக்குப் பாவத்தையே தருகிறது. இப்படிப்பட்ட போலித் துறவிகளால் பெரு வாழ்வினை உடைய மன்னனும் பெருமை குன்றுவான். இவர்கள் தம் தவறை உணரும் வகையில் திருந்துவதற்கு வாய்ப்பினை அளிப்பது மன்னனின் கடமையாகும். இவர்கள் திருந்தவில்லை என்றால் 'அபராதம் அளித்தல்', 'தண்டனை விதித்தல்' போன்ற உபாயங்களை மன்னன் மேற்கொள்ளலாம் என்று திருமூலர் அறிவுரை கூறுகின்றார்.

"மூடங் கெடாதோர் சிகைநூல் முதற்கொள்ளில்
வாடும் புவியும் பெருவாழ்வு மன்னனும்
பீடு ஒன்று இலனாகும் ஆதலால் பேர்த்துணர்ந்து
ஆடம் பரநூல் சிகையறுத் தால்நன்றே"

- திருமந்திரம் (241)

"ஞானம் இலாதார் சடைசிகை நூல்நண்ணி
ஞானிகள் போல நடிக்கின்றவர் தம்மை
ஞானிக ளாலே நரபதி சோதித்து
ஞானமுண் டாக்குதல் நலமாகும் நாட்டிற்கே"

- திருமந்திரம் (242)

இப்பாடல் இரண்டும் மேற்கூறப்பட்ட கருத்துக்களை விளக்கி நிற்கின்றன. போலித் துறவிகளுக்கு இதன் மூலம் திருமூலர் எச்சரிக்கை விடுக்கிறார்.

அறிவாளிகள் முதல் அரசியல் வாதிகள் வரை போலித் துறவிகளுக்குப் புகலிடம் அளிக்கும் காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை திருமந்திரம் இதன் மூலம் நினைவுபடுத்துகிறது.

**அர்ச்சனை செய்பவர்களை அறிந்திருத்தல்:**

இறைவனுக்கு பூசை செய்யும் அர்ச்சகர்கள் தவ ஒழுக்கங்களில் சிறந்தவர்களாக இருத்தல் வேண்டும். வேத, ஆகம நூல்களைப் படித்தவர்களாகவும், சைவ மரபு வழி வந்தவர்களாகவும், வள்ளுவர் வாய்மொழிக்கு வாழ்வுரை யாகவும் வாழ்பவரே தவமுடைய சிவத்தை அர்ச்சிக்கும் பெருவாழ்வு பெற்றவராவார். சேக்கிழார் தாம் இயற்றிய திருத் தொண்டர் புராணத்தில் இதுபற்றி விரிவாகவும், விளக்கமாகவும் கூறியுள்ளார். உணர்வில் சிவத்தைப் போற்றாமல் பிறப்பால் இறைவனை அர்ச்சனை செய்யும் தொழில் செய்பவர் 'பேர் கொண்ட பார்ப்பான்" (519) என்பார் திருமூலர். இவர்கள் அர்ச்சனை செய்தால் நாட்டை ஆளும் மன்னனுக்குத் தீர்க்க முடியாத நோய் ஏற்படும். நாடு பஞ்ச நிலையை அடையும். எனவே தகுதியுடைய அர்ச்சகர்களை நியமிக்கும் பொறுப்பை மன்னன் மேற்கொள்ள வேண்டும் என்று திரு மூலர் குறிப்பிடுகிறார்.

**தனிமனித அறம் பேணல்**

அரசன் நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் அறத்தைப் பேண வலியுறுத்த வேண்டும். அப்போது தான் இம்மைக்குரிய செல்வமும், மறுமைக்குரிய முக்தியும் அனைவருக்கும் கிட்டும்.

திருமூலர்,

"திறந்திரு முத்தியும் செல்வமும் வேண்டின்
மறந்தும் அறநெறியே ஆற்றல் வேண்டும்
சிறந்தநீர் ஞாலம் செய்தொழில் யாவையும்
அறைந்திடில் வேந்தனுக்கு ஆறில் ஒன்று ஆமே"

(திருமந்திரம் பாடல் எண்: 244)

என்கிறார்.

'மறந்தும் புரிதல்' என்பது பழக்கத்தால் நம்மையறியாமல் செயல்படுதலாகும்.

"நற்றவா உன்னை நான் மறக்கினும்
சொல்லு நா நமச்சிவாயவே" என்பது போல, மனிதனும் எள்ளளவிலாவது மறந்தும் அறம் புரியவேண்டும் என்பதாகும். தனி மனித அறம் மன்னனுக்கு யாது பலன் கருதி என்று நோக்கினால் மக்கள் வருவாயில் ஆறில் ஒரு பங்கு மன்னனுக்குச் சேர்வது போல தனிமனித பாவ புண்ணியமும் ஆறில் ஒரு பங்கு மன்னனைச் சேரும் என்பதாகும். (தொடரும்)

---

*பொய் சொல்லுதல் கொலைக்குச் சமமானது*

# சைவசித்தாந்தமும் அறிவியலும்

சைவசித்தாந்தக் கலாநிதி, சிவஞானக் கலாநிதி, தமிழ் மறை சீலர்
சிவத்திரு அ. சொ. சுப்பையா M.A.

**சென்ற இதழ் தொடர்ச்சி**

சிவயோகத்தில் அறிவியலின் பங்கு

இந்த நான்கு உயரிய படிநிலைகளில், முன் இரண்டில் அடியவர் திருக்கோயில்களிலுள்ள திருமேனிகளை வழிபட்டு முன்னேறுகின்றனர். அவை அவர்களுக்குப் புறத்தே இருப்பவை.

மூன்றாவது நிலையாகிய சிவயோகத்தில் ஆன்மா ஒன்றியிருந்து நினைக்கிறது. அப்போது அதற்கென அமைந்த உடம்பே அவ் ஆன்மாவுக்குப் உயிரின் புறத்தே உள்ள ஓர் அற்புதத் திருக்கோயில் ஆகிவிடுகிறது. அந்நிலையில் அவ் ஆன்மா தன் உடம்பைத் திருக்கோயிலாகவும், உள்ளத்தைக் கருவறையாகவும் சீவனைச் சிவலிங்கமாகவும், உள் உறுப்புக்கள் பலவற்றையும் சோடசோபசாரத்துக்கான பொருள்களாகவும் சிந்திக்கும் பக்குவத்தைப் பெறுகிறது. திருமூலரின் ஒரு மந்திரமே இதற்கு அரணாகும்.

**உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு ஆலயம்
வள்ளல் பிரானுக்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப்புலன் ஐந்தும் காளா மணி விளக்கே.**

**– திருமந்திரம் 1823**

மனித இனம் முழுமைக்கும் இவ் இறை - இயல்பு பொதுவானது. அவனும் ஒளிமயமானவன். ஆயினும் தன்னை நினையாதார் உள்ளத்தில் அவன் மறைந்தே இருக்கிறான். இதனை, 'ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே' எனத் திருவாதவூரர் சிவபுராணமாக அறிவுறுத்தக் காணுகிறோம்.

**ஏன் மனித உடம்பினில் இறை வெளிப்பாடு?**

தன்னுடைய இருப்பையும் இயல்புகளையும், படைப்பையும்,

---

*அடுத்தவர் பொருள் நெருப்புக்குச் சமன்*

பயன் பாடுகளையும் மெய்யன்பர்கட்கு உணர்த்த எண்ணிய சிவபெருமான் ஓர் உத்தி செய்தான். கல்வெட்டுகளும், செப்பேடு போன்றவையும் காலஅடைவில் பின்னப்பட்டு அழிந்துவிடக் கூடியவை. மனித உடம்பு என்பதோ வாழையடி வாழையாக வருவதோடு, நாடு, இனம், மொழி, மரபு, மதம் என எவ்வித வேறுபாடுமின்றி ஒரே தன்மையான உள் கட்டமைப்பைக் கொண்டு விளங்குவது. ஆதலால் நாம் உய்த்துணர்தற்கு ஏதுவாக நம் மனித உடலிலேயே அனைத்தையும் உவமையாகவும், உருவகமாகவும் வடிவமைத்துள்ளான் எனக் கொள்ளுதல் முற்றிலும் சாலும். இதனை உய்த்துணரச் செய்கிறது ஒரு தொல்காப்பிய நூற்பா.

**வினை பயன் மெய்உரு என்ற நான்கே**
**வகைபெற வந்த உவமைத் தோற்றம்** - (உவமையியல்)

இங்ஙனம் தன் உள்ளேயே சிவபரத்தையும், சிவத்தையும் அவர்தம் பல்வேறு வடிவ உருவ அமைப்புகளையும், அருளிப்பாடுகளையும், கண்டு பயன் பெறுவதற்கு உடற்கூறு பற்றிய அறிவு பெரிதும் துணை நிற்கிறது.

நாம் நம் சாதனைகளுக்குக் 'கல்வெட்டுச் சான்று' வைப்பதுபோல் இறைவன் தன் இருப்புக்கும் இயல்புக்கும், ஏனைய காரியங்களுக்கும் அவற்றின் பயனுக்குமாகத் தன் ஒவ்வொரு படைப்பிலும் தன் முத்திரையை மிகச் சீராகப் பதித்து வைத்துள்ளான். அவற்றை 'உடல்வெட்டுச் சான்றுகள்' என்றே கூறலாம். அவற்றுள் சிலவற்றை இங்குக் காண்போம்.

**இருதயம்:**

சிவலிங்க வடிவமானது கூத்தப்பெருமானின் தூக்கிய திருவடியை நினைவுறுத்துவது. நம் இருதயம் அஃது வலம், இடம் என்னும் இரண்டு பகுதிகளாய் முறையே நீலநிறக் குருதியையும் செந்நிறக்குருதியையும் கொண்டுள்ளது. மாதொருபாகனின் அர்த்தநாரீசுவர வடிவத்தை அறிவுறுத்துவது. சிவபெருமான் அபிடேகப்பிரியன் என்பதை உணர்த்துமாப் போலே

---

*மனக்குழப்பம் இல்லாமலிருக்கும் போது*
*எந்தக் கருமமும் சித்தியாகும்.*

நம் ஒவ்வொருவர் இருதயத்திலும் குருதி இடையறாது ஊற்றிக்கொண்டே இருக்கிறது. இப் பகுதி அனாகத ஆதாரம் என்றும் அகப்பூசைக்குரிய வழிபாட்டுக்களம் என்றும் ஆகமங்கள் அறிவுறுத்துகின்றன. இ∴து அறிவியலாலும் ஒப்ப நினைவு கூரத் தக்கதே.

**கயிலையும், மூளையும்**

கயிலையங்கிரி இமயமலையில் உள்ளது. அ∴து ஓர் மடிப்பு மலை. வெள்ளிப் பனிமலையான அது எண்ணற்ற குன்றுகளையும், இடையிடையே பள்ளத்தாக்குகளையும் கொண்டது. ஏராளமான வளங்களைத் தன்னகத்தே உடையது. அங்கே நான்கு இடங்களிலிருந்து உற்பத்தியாகிற கங்கை என்னும் புனித ஆறு ஓர் இடத்தில் கூடிக் கங்கோற்பத்தி என்னும் பெயர் கொள்கிறது. அங்கிருந்து புறப்பட்டுச் சுற்றி வளைத்து ஓடி மலையடியில் உள்ள நிலப் பரப்புக்கு வளம் சேர்க்கிறது.

அதேபோன்றுதான் நம் உடம்பின் சிரசு என்னும் தலையினுள் அறிவுத்தானமாக விளங்குகிறது பெருமூளை. இது திருக்கயிலை மலையிலுள்ள ஏராளமான சிகரங்களையும் பள்ளத்தாக்குகளையும் ஒத்ததாய் எண்ணற்ற மடிப்புகளையும் இடையிடையே பள்ளங்களையும் கொண்டு விளங்குகிறது. (Frontal lobe, Occipital lobe, Pariatal lobe, Temporal lobe) என்னும் நான்கு பகுதிகளாகத் திகழ்கிறது. இவற்றில் ஊறுகிற ஆற்றல்மிகு நீரோட்டம் (Cerbre Spinal Fluid CSF) 'மூளை - முதுகுத்தண்டுநீர்' என்னும் மருத்துவப் பெயரினை உடையது. ஆகாயகங்கை எனப் போற்றுதற்குரியது. அது மூளையின் மையப் பகுதியிலுள்ள கொராய்டு ப்ளக்ஸஸ் (Choroid Plexus) என்ற இடத்தில் ஒருங்கு கூடுகிறது. அங்கிருந்து புறப்பட்டுப் பெருமூளையை சுற்றி ஓங்கார வடிவில் ஓடி முதுகுத்தண்டின் வழி உடல் முழுவதற்கும் ஊற்றம் தருகிறது. இதனை நம் முன்னோர் தமிழ் நெடுங்கணக்கில் 'ஓ' என்னும் வரிவடிவத்தால் போற்றினர் எனலாம்.

---

*பூரண ஞானம் பெறும் வரை குருடனாகவும்*
*செவிடனாகவும் ஊமையாகவும் இரு.*

**சிவபெருமானின் ஐந்தொழிலகம்**

நாதம், விந்து, சாதாக்கியம், ஈசுவரம், சுத்தவித்தை என்பன விந்துமாயையிலுள்ள ஐந்து தூய தத்துவங்கள் என்பதும், இவையே சிவபெருமானின் ஐந்தொழிலகமாக விளங்குகின்றன என்பது சைவசித்தாந்தம்.

நம் சிரசினுள் அறிவு வளம்மிகு பெருமூளையே ஆண்டவனின் இருப்பிட மாகிறது. இஃது வலம் இடம் என இரண்டு கூறுகளை உடையதாய் முறையே சிவனுக்கும் சத்திக்கும் உறைவிடமாகிறது. இஃது தோற்றத்தால் மட்டுமன்றித் தொழிற்பாட்டாலும் மாதொருபாகனை நினைவுறுத்துகிற அமைப்புடையது.

**சோமாஸ்கந்த மூர்த்தம்**

பெருமூளை, சிறுமூளை, நடுமூளை என்னும் இதன் மூன்று பகுதிகளும் இணைந்து சோமாஸ்கந்த மூர்த்தத்தை நமக்கு உணர்த்துகின்றன. இதனை ஆக்ஞை ஆதாரம் என்றும் தியானத்தானம் என்றும் ஆகமங்கள் கூறுவது இக்கால அறிவியலுக்கும் நன்கு பொருந்தி வரக் காணுகிறோம்.

**கூடிய பெருமான்**

சிவனும் சத்தியும் பொருந்தியதால் தோன்றியது சதாசிவத் திருவுரு. அதற்கு சாதாக்கியமே திருமேனியாகிறது என்பது சித்தாந்தம். நம் தலையில் இரண்டு மூளைக் கூறுகளுக்கும் நடுவில் அவ் இரண்டு கூறுகளையும் இணைப்பதாக நெடிய வெண்ணிற உறுப்பு ஒன்று உள்ளது. அதற்குக் கார்ப்பஸ் காலசம் (Corpus Callosum the largest white commissure) என்பது மருத்துவப்பெயர். அஃது சிவபெருமான் சிரசிலுள்ள மூன்றாம் பிறைச் சந்திரனின் வடிவில் உள்ளது. இதுவே சாதாக்கிய தத்துவமாக விளங்குகிறது. சிவபெருமான் காரணவிஷ்ணு நிலையில் பள்ளிகொண்ட பெருமானாகத் (சென்னைக்கு அருகிலுள்ள) திருவள்ளூரில் காட்சியளிப்பது ஈண்டுச் சிந்திக்கத் தக்க சித்தாந்த உண்மையாகும். (தொடரும்)

---

*பூவாகிப் பிஞ்சாகிப் பின்முற்றிப் பழுக்கிறது போல*
*அனுபவ ஞானமும் படிப்படியாய் உண்டாகும்*

# கனடா இந்து சமயப் பேரவைத் திருக்கூட்டத்தினரின் திருத்தல யாத்திரை திருமுறை மாநாட்டுச் சிறப்பு மலர் 2013

## விமர்சனம்

புதுவை இராமன்

ஒன்றாரியோ இந்து சமயப் பேரவை கனடா வாழ் சைவ சமயப் பற்றுள்ள அனைவருக்கும் இறைபக்தியுடன் கூடிய ஆன்மீக ஈடுபாட்டிற்கு ஒளி விளக்காக அரும் பெரும் தொண்டாற்றி வருவதை கனடா வாழ் தமிழ்ச் சமூகம் அனைவரும் நன்கு அறிவார்கள். புலம் பெயர் தமிழர்கள் தாங்கள் சென்ற நாடுகளில் எல்லாம் பல இந்து ஆலயங்களையும். சைவ சமய மன்றங்களையும் உருவாக்கி நாளைய இளைய சந்ததியினரும் பயனடையும் வகையில் இந்து சமயத்தில் உள்ள வாழ்வியல் நெறிகளையும், தமிழர்களின் பாரம்பரியமிக்க கலாச்சாரங்கள் அனைத்தும் பேணிப் பாதுகாத்து வருகின்றனர். தவிர இந்து சமயத்தின் தெய்வீகத் தத்துவங்களை மேற்குலக நாட்டினரும் அறிந்து, புரிந்து ஆழ்ந்த ஈடுபாட்டுடன் அவற்றைப் போற்றி வருவது தமிழுக்கும், தமிழர்களுக்கும் கிடைத்த பெருமையாகும்.


அவ்வகையில் 1994ம் ஆண்டு முதன் முதலாக ஆத்மீக வள்ளல் திரு நா.முத்தையா அவர்கள் கனடாவிற்கு வருகை புரிந்திருந்தபோது இங்கு வாழும் தாயகத்து தமிழர்களின் எதிர்கால சந்நதியினர் தமிழையும், இந்து சைவ சமய நெறிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு பின்பற்ற வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்தில் இப்பேரவையை ஸ்தாபித்தார். அதன் மூலம் தமிழும், தமிழர்களின் பண்பாட்டு கலாச்சார நெறிமுறைகளும் முன்னெடுக்க வழி வகுத்தார். கடந்த 20 ஆண்டுகளில் இப்பேரவை ஆற்றிவந்த ஆன்மீகப் பணிகளும், பெற்ற சாதனைகளும் அளப்பரியது என்பதோடு, சொந்தமாய் (ஸ்காபரோ,1473.வேர்ச்மௌண்ட் வீதியில்) ஒரு இடத்தை வாங்கி அதற்கு ஆத்மஜோதி இல்லம் என்று பெயர் சூட்டி, அதில்

---

*இன்பமும் துன்பமும் இகழும் புகழும் மாறி மாறி வரும். இவற்றைக் கண்டு அஞ்சப்படாது*



சிதம்பரத்தில் திருமுறை மாநாட்டின் பொழுது ஊர்வலக் காட்சி



மண்டபத்தில் வழிபாடு செய்யும் பொழுது



2010 திருத்தல யாத்திரையில் இந்தியப் பேராளர்கள் சிலருடன்

ஆறுமுகநாவலர் திருஉருவ வெண்கலச் சிலையை நடுநாயகமாய் அமைத்து பிற தெய்வச் சிலைகளையும் உருவப்படங்களையும், ஆன்மீக குருமார்களின் படங்களையும் வைத்து திருக்கூட்டத்தினர் அன்றாடம் பூஜை வழிபாடுகளையும், முற்றோதல்களையும் நடத்தி வருகின்றார்கள். இப்பேரவை தனது ஆன்மீகப்பணிகளையும், தொண்டுகளையும் சிறப்புடன் அமைத்து மிக வெற்றிகரமாய் மேற்கொண்டு வருகிறது என்றால், அன்று தொட்டு இன்று வரை அதற்குப் பக்க பலமாய் திகழ்ந்து, உறுதுணையாக தங்களை அர்ப்பணித்து, முழு ஈடுபாட்டுடன் சேவை புரிந்து வரும் முன்னணி நிர்வாகிகள், உறுப்பினர்கள் மற்றும் தன்னார்வலர்களின் பங்களிப்பு அளப்பரியதாகும். அதற்கேற்ப இப்பேரவையில் உள்ள 155 ஆயுள் உறுப்பினர்கள் மற்றும் இரு நூற்றுக்கு அதிகமான திருக்கூட்ட உறுப்பினர்கள் உள்ளனர். அதில் பெரும்பாலான ஆண்களும், பெண்களும் முதியோர் எனினும் தற்போது இளைய சந்ததியினரும் பயன் பெற்று வருகின்றனர். அந்த வகையில் கடந்த 15 வருடங்களாக திருவாசகம், திருப்புகழ் மற்றும் திருமுறை முற்றோதல் ஆகியவற்றை தொடர்ந்து மேற்கொண்டும், அனைவரும் பயன் பெறும் வகையில் ஒரு சிறந்த நூலகத்தை 2010ம் ஆண்டு உருவாக்கி 3000க்கும் அதிகமான அற்புதமான ஆன்மீக நூல்களைக் கொண்டு, அனைவரும் பயனடையச் செய்கின்றது. இதுவரை 52 ஆன்மீக நூல்களை வெளியிட்டுள்ளதும், குறிப்பாக காலாண்டு சஞ்சிகையாக ஆத்மஜோதி இலவச இதழையும் கடந்த 15 ஆண்டுகளாக தொடர்ந்து வெளியிட்டு வருவதும், திருமுறை விழா, மாநாடு, தமிழர்கள் பண்டிகைகள், ஆன்மீகச் சித்தர்களின் குருபூஜை ஆகியவற்றை நடத்திக் கனடிய மண்ணில் சைவ சமயம் வளர்ச்சியுறவும் தழைக்கவும் செய்து வருகின்றது. முக்கியமாக இங்குள்ள இளம் சிறார்களை ஊக்குவித்து திருமுறை மனனப் போட்டி, பேச்சுப் போட்டி. பண்ணிசை போட்டி, எழுத்துப் பரீட்சை ஆகியவற்றை நடத்திப் பரிசுகளும், பாராட்டுச் சான்றிதழ்களும், தங்கப் பதக்கங்களும் வழங்கி கௌரவித்து வருவதும், ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் கூட்டு வழிபாட்டினை நடத்தி வருவதும், இரண்டு வருடத்திற்கு

---

*கடவுள் கூட இருக்கிறார் என்று எண்ணிக்கொண்டு வேலையைச் செய்யுங்கள்.*



தருமபுர ஆதீனச் சிவச்சந்திரன் அவர்களுடன் சிவ. முத்துலிங்கம்



சிதம்பரம் அப்பா தொண்டு நிறுவனச் செயலாளருடன் சிவ. முத்துலிங்கம்

ஒரு முறை இந்தியத் திருத்தலங்களுக்கு புனித யாத்திரை மேற்கொண்டு வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

2013ம் ஆண்டு 5வது முறையாக தனது அடியார்களுடன் இந்தியத் திருத்தல யாத்திரையை மேற்கோண்டுள்ள இப்பேரவையின் வளர்ச்சிகளும், சாதனைகளும் ஏராளம். இந்நிலையில் கடந்த ஆண்டு மேற்கொண்ட இந்தியப் புனித யாத்திரையில் பன்னிரு திருமுறை முற்றோதல் முக்கிய இடம் பெற்றுள்ளது. இப்புனித யாத்திரையின் முக்கிய அம்சமாக சிதம்பரத்தில் 22.-12.-2013 அன்று திருமுறை மாநாடு கமலீஸ்வரன் கோயில் தெரு, ஆறுநாட்டு வேளாளர் மண்டபத்தில் மிகவும் உன்னதமாய் நடைபெற்றுள்ளது. அத்துடன் அன்று வெளியிடப் பட்ட திருமுறை மாநாட்டுச் சிறப்பு மலர் கிடைக்கப்பெற்று, அதில் வெளியிடப்பட்டிருந்த அருமையான கட்டுரைகளும், ஒன்ராறியோ இந்து சமயப்பேரவை உறுப்பினர்கள் மேற்கொண்ட புனித யாத்திரை விபரங்களும், இங்குள்ள அனைத்துத் தமிழ்ச் சமூகமும் படித்து இன்புற வேண்டும் என்பதற்காக எனது விமர்சனமாக ஆத்மஜோதி இதழில் தந்துள்ளேன்.

இன்று அனைத்துப் பொது அமைப்புக்களிலும் ஆண்டு விழா காணும்போது பொதுவாகவே மலர் வெளியீடு என்பது ஒரு

மரபாகும். 2013ம் ஆண்டு சிதம்பரத்தில் நடைபெற்ற திருமுறை மாநாட்டின் நிறைவு விழாவின்போது வெளியிடப்பட்ட திருமுறை மாநாட்டுச் சிறப்பு மலரை, ஒன்ராறியோ இந்து சமயப்பேரவையின் செயலாளர் திரு சிவ முத்துலிங்கம் அவர்கள் கையளித்தார்.

இம் மலரின் முகப்பில் 2007ஆம் ஆண்டு திருமுறை மாநாட்டு அடியார்களின் புகைப்படமும், பின் பக்க அட்டையில் ஆடல் வல்லான் நடராஜப் பெருமான் அன்னை சிவகாமியுடன் காட்சி தர நான்கு சைவ சமயக் குரவர்களின் திரு உருவங்களும் பசுமையும், மஞ்சளுமாய் அழகிய வண்ணத்தில் காட்சி தருவதே நம்மை தில்லைக்கு அழைத்துச் சென்று விடுகிறது. நூலின் முகப்பு அட்டையின் அடுத்த பக்கத்தில் 2013 முற்றோதல் விழா புகைப்படமும், அடுத்தப் பக்கத்தில் சிதம்பரம் ஸ்ரீ வேதபாஸ்கர மஹாயக்ஞ மண்டலி சார்பில் ஒன்ராறியோ இந்து சமயப் பேரவையின் செயலாளரும், புனித யாத்திரையின் பொறுப்பாளருமான சிவத்திரு சிவ முத்துலிங்கம அவர்களுக்கு 'திருமுறை ஞான ரத்தினம்' என்ற பட்டம் வழங்கி கௌரவித்த சான்றிதழும் அச்சிடப்பட்டுள்ளது நம்மை எல்லாம் பெருமைகொள்ள வைத்துள்ளது வரவேற்கத்தக்கதாகும். தொடர்ந்து ஒவ்வொரு பக்கமாக பார்க்கும்போது, திருவண்ணாமலை கோவில் கோபுரத்துடன் கிரிமலையின் தோற்றமும், மலர் முகம் என்று மலரின் தொகுப்பாசிரியரின் முன்னுரையும், கோவை சிவபிரகாச சுவாமிகளின் ஆசியுரையும், சிதம்பரம் ஸ்ரீலஸ்ரீ மௌன மடாலய அதிபர் ஸ்ரீலஸ்ரீ மௌன சுந்தரமூர்த்தி சுவாமிகளின் வாழ்த்துரையும், திருமுறை முற்றோதல் பாராட்டு வாழ்த்துப்பா ஆகியவை மிகப் பொருத்தமாய் தரப்பட்டுள்ளது.

மேலும் கனடாவிலிருந்து இப்புனித யாத்திரையை மேற்கோண்டு 13-11-.2013 முதல் 28-12-2013 வரை தாங்கள் தரிசித்த தமிழகத்தில் மிகவும் புகழ் பெற்ற புண்ணிய சேத்திரங்களான திருவீழிமழலை, திருவாவடுதுறை, சிதம்பரம், சீர்காழி,

---

*இன்பமும் துன்பமும் உலகியற்கை. அவற்றைப் பார்த்துக் கொண்டு சும்மாய் இரு.*

திருவண்ணாமலை, திருப்பாதிரிப்புலியூர், திருவெண்காடு, திருவேள்விக்குடி, உத்திரகோச மங்கை ஆகிய ஸ்தலங்களுக்கு சென்று வழிபாடுகள் செய்தும், குறிப்பாக முதலாம் திருமுறை முதல் பன்னிரெண்டாம் திருமுறை வரை முற்றோதல் செய்துள்ள விபரங்களும் தேதி வாரியாகத் தரப்பட்டுள்ளன. இதற்கும் மேலாக ஒரு விழா மலர் என்றால் அதில் இடம்பெறும் பல வகை கட்டுரைகள் போன்று இதிலும் பல இடம் பெற்றுள்ளன.

கனடா சைவ சித்தாந்த மன்றத் தலைவர் சிவநெறிச்செல்வர் தி.விசுவலிங்கம், வைத்தியகலாநிதி இலம்போதரன், ஒன்ராறியோ இந்து சமயப் பேரவையின் தலைவர் கவிநாயகர் திரு கந்தவனம், பொருளாளர் செ.சோமசுந்தரம் போன்ற பிரபலங்களின் வாழ்த்துச்செய்திகளும், பல ஆன்மீகக் கட்டுரைகளும் காணலாம். குறிப்பாக கனடா ஒன்ராறியோ இந்து சமயப்பேரவை ஆற்றும் அறப்பணிகள், கனடாவும் சைவமும், தொண்டு, தெய்வத்தமிழ், சிவ வழிபாடு, திருவாசகத்தின் சிறப்பு, திருமுறைகளின் பயன்கள், அப்பரின் அற்புதச் செயல், ஆன்மீக விழிப்புணர்வு மற்றும் தனித்துவமான இறைபக்தி, நான் பெற்ற பேறு, அடியார்க்கு எளியன், காலத்தைப் பாழாக்கினேன் போன்ற தலைப்புகளில் தல வழிபாட்டு அனுபவக் கட்டுரைகள் யாவும் அவசியம் அனைவரும் படித்துப் பயன் பெற வேண்டிய அற்புதப் படைப்புகளாகும். இவற்றிற்கும் மேலாக இப்பேரவை உறுப்பினர்களான ஒன்பது திருக்கூட்டத்தினர் மேற்கொண்ட திருத்தல யாத்திரையைப் பற்றிய விபரங்களுடன் பெற்ற அனுபவங்களையும் இப்பேரவையின் உப செயலாளர் திருமதி புனிதவதி சிவசுப்பிரமணியம், பேரவை உறுப்பினர் திருமதி சந்திராதேவி கணேசராஜா மற்றும் திரு வ.சுண்முகசுந்தரம் ஆகியோர் எழுதிய பயணக் கட்டுரைகள் நம் அனைவரையும் நால்வர் இயற்றிய பாடல்களை அரங்கேற்றிய சீர்காழி, திருவண்ணாமலை, சிதம்பரம் போன்ற பிரசித்தி பெற்ற ஆலயங்களை வலம் வரச்செய்கின்றது. மேலும் 22-.12-13 அன்று சிதம்பரத்தில் உள்ள ஆறு நாட்டு வேளாளர் மடத்தில் மிகச் கோலகல்மாய் நடத்திய திருமுறை மாநாட்டு விபரங்களும்,

---

*ஒழுக்கமாக இருந்து கொள். எல்லாம் சரியாக நடைபெறும். ஒழுக்கமே உயர்வைத் தரும்.*

விழா மலர் வெளியீடு ஆகிய தகவல்களும் மலரின் இறுதிப்பகுதியில் உள்ளன. மொத்தத்தில் அனைத்து கட்டுரைகளும் மிக உயர்வாக அமைந்து நமது ஆன்மீகச் சிந்தனையைத் தூண்டுவதோடு, அடுத்த முறை ஒன்ராறியோ இந்து சமயப்பேரவை மேற்கொள்ளும் இப்புனித யாத்திரையில் பங்கு பெறவும், இப்பேரவையின் உறுப்பினராய் நம்மை இணைத்துக்கொள்ள வைக்கும் என்பதில் ஐயமில்லை. அந்த அளவிற்கு அவர்கள் மேற்கொண்ட யாத்திரையின் நோக்கமும், சென்ற ஊர்களும், தரிசித்த சிவன் ஆலயங்கள் யாவும் படிக்க படிக்க நம் உள்ளத்தில் ஆன்மீக அலைகளை பரவச்செய்து விடுகிறது.

இவ்வாறு தென் இந்திய யாத்திரையை 5ம் முறையாக மேற்கொண்ட கனடிய சிவனடியார்கள் தாங்கள், கண்டு ரசித்து, மகிழ்ந்து பெற்ற அனுபவங்களை இப்பயண அனுபவக் கட்டுரைகள் புலப்படுத்துகின்றன.

ஒன்ராறியோ இந்து சமயப்பேரவையின் ஆன்மீகத் தொண்டு மென்மேலும் வளர்ந்து, இங்குள்ள தமிழ்ச் சமூகம் அனைத்தும் நற்பயன் பெற ‘தென்னாடுடைய சிவனே போற்றி! எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!’ என எல்லாம் வல்ல சிவபெருமானை வணங்கிப் பேரவையின் நோக்கமாய் அமைந்துள்ள **சைவம் வாழ்ந்தால் தமிழ் மொழி வளரும் – தமிழ்மொழி வளர்ந்தால் சைவம் வாழும்** என்பதை நேற்றும், இன்றும், நாளையும் தொடர நம்மை அர்ப்பணித்துக்கொள்வோம்.

வாழ்க தமிழும் சைவமும்!

---

## 2013 தை மாதத்திற்குப்பின் ஆத்மஜோதி சஞ்சிகைக்கு நிதி உதவி வழங்கியோர்

அமரர் வேலுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை, உடுப்பிட்டி
நினைவாக (2013) $100.00

சு. சிவதாஸ், முன்னாள் ஆசிரியர்,
யாழ். ஸ்ரான்லி கல்லூரி (2013) $100.00

---

உள்ளுக்குள் இருந்து வருவதைப் பேசு.
அல்லாவிட்டால் பேசாதே.

# இந்து சமயப் பேரவைச் செய்திகள்



## சித்தர் பாடல்கள் முற்றோதல்:

28-12-2013, 4-1-2014, 11-1-2014 ஆகிய நாட்களில் பிரதிச் சனிக்கிழமை தோறும் சித்தர் பாடல்கள் முற்றோதல் நடைபெற்றது. நண்பகல் சிவபூசையும் விசேட அன்னதானமும் இடம்பெற்றது.

## தைப்பூச வழிபாடு



16-1-2014 வியாழக்கிழமை தைப் பூசத்தை முன்னிட்டு காலையில் 8:30 மணி தொடக்கம் மாலை வரை கந்தரலங்காரம், கந்தரனுபூதி, திருப்புகழ், திருமுருகாற்றுப்படை, சண்முககவசம் போன்ற முருக இலக்கியங்கள் பக்தியுடன் ஓதப்பெற்றது. நண்பகல் விசேட சிவபூசையும் இடம்பெற்றது.

## திருமந்திரம் முற்றோதல்



18-1-2014, 25-1-2014, 1-2-2014 ஆகிய நாட்களில் பிரதிச் சனிக்கிழமை தோறும் திருமந்திரம் முற்றோதல் நடைபெற்றது. பேரவையின் திருக்கூட்டத்தினர் பக்தியுடன் ஈடுபட்டனர். நண்பகலில் சிவபூசையும் விசேட அன்னதானமும் இடம்பெற்றது.

## அபிராமிப்பட்டர் குருபூசை



30-1-2014 வியாழக்கிழமை அபிராமிப்பட்டரின் குருபூசை காலை 9:30 மணி தொடக்கம் மாலை வரை நடைபெற்றது. அபிராமி அந்தாதி, அபிராமிப் பதிகம் ஆகியன பக்தியுடன் ஓதப்பெற்று விளக்கவுரையும் வாசிக்கப்பெற்றது. விசேட பூசையும் அன்னதானமும் இடம்பெற்றது.

## ஐந்தெழுத்து பெருவேள்வி ஒளி இளைநாடாக் காட்சி

தமிழ் வேதம் சஞ்சிகை இதழ் ஆசிரியரும், பிரபல சொற்பொழி

வாளருமாகிய சிவ ஆ. பக்தவச்சலம் அவர்களின் ஐந்தெழுத்து ஒளி நாடாக் காட்சி பேரவையின் திருக்கூட்டத்தினருக்கு 8-2-2014 சனிக்கிழமை மாலை காண்பிக்கப் பெற்றது.

அன்றையதினம் காலை 8:30 மணி தொடக்கம் மாலை 3:00 மணிவரை அகண்ட சிவ நாம சங்கீர்த்தனம் இடம்பெற்றது. பேரவையின் திருக்கூட்டத்தினர் பக்தியுடன் பங்குபற்றினர்.

**நடேசர் அபிசேகம்**



13-02-2014 வியாழக்கிழமை நடேசர் அபிசேகத்தை முன்னிட்டு காலையில் இருந்து மாலை வரை திருவாசகம் முற்றோதல் நடைபெற்றது. நண்பகல் நடராசப் பெருமானுக்கு விசேட அபிசேக ஆராதனைகளும் அன்ன தானமும் இடம்பெற்றது.

**மாசி மகத்தை முன்னிட்டு திருவாசகம் முற்றோதல்**

15-2-2014 சனிக்கிழமை மாசி மகத்தை முன்னிட்டு காலை 8:30 மணி தொடக்கம் மாலை 4:30 மணி வரை திருவாசகம் முற்றோதல் நடைபெற்றது. நண்பகல் சிவபூசையும் விசேட அன்னதானமும் இடம்பெற்றது.

**மகா சிவராத்திரி வழிபாடு**



மகா சிவராத்திரியை முன்னிட்டு 27-2-2014 வியாழக்கிழமை காலை 8:30 மணி தொடக்கம் மலை 5:00 மணி வரை அகண்ட சிவ நாம சங்கீர்த்தனம் நடைபெற்றது. பேரவையின் திருக்கூட்டத்தினர் பக்தியுடன் பங்கு பற்றினர். சிவராத்திரி விரதநாளன்று பகற் பொழுது சிவ சிந்தனையுடன் கழிந்தது.


மாலை 6:00 மணிக்கு திருவாசகம் முற்றோதல் ஆரம்பிக்கப்பெற்று இரவு முழுவதும் ஓதப்பெற்றது. நான்கு சாமங்களும் அபிசேக ஆராதனைகளும் விசேட சிவபூசையும் இடம்பெற்றது. சிவராத்திரி இரவு முழுவதும் சிவநாமம்

---

*இறைவனின் திருவடியைச் சேர மனம் பரிசுத்தமாக இருந்தால் போதும்.*

ஒலித்தபடியே இருந்தது. 28-2-2014 வெள்ளிக்கிழமை காலை 6:00 மணிக்கு திருவாசகம் முற்றோதல் பூர்த்தி செய்யப்பெற்றது.

**குடைச் சுவாமிகளின் குருபூசை**



7-3-2014 வெள்ளிக்கிழமை இந்து சமயப் பேரவைத் திருக்கூட்டத்தினர் 18ஆவது வருடமாக குடைச்சுவாமியின் குருபூசையை கொண்டாடினர். காலையில் இருந்து மாலை வரை திருவாசகம் முற்றோதல் நடைபெற்றது. நண்பகல் சிவபூசையும் சுவாமிகளின் திருவுருவப் படத்திற்கு திருவடி வணக்கமும் இடம்பெற்றது.

குடைச்சுவாமியின் பக்தரும் பேரவையின் நிர்வாகிகளில் ஒருவருமான அமரர் க. வித்தியானந்தன் அவர்களுக்கு ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நிகழ்த்தப்பெற்றது. பேரவையின் திருக்கூட்டத்தினர் பக்தி சிரத்தையுடன் பங்குபற்றினர்.

பல வருடங்கள் குடைச்சுவாமிகளின் குருபூசையை அமரர் க. வித்தியானந்தன் அவர்கள் முன்னின்று நடத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது.


**முருகன் புத்தகசாலை**



இலங்கை, இந்தியாவில் இருந்து நேரடியாக புத்தகங்கள், பத்திரிகைகள் இறக்குமதி செய்து விற்பனை செய்கிறோம்.

அதிவேக துரித பணமாற்றுச் சேவை

**GTA MALL, 5215 Finch Ave. E. Unit 125**

**TEL: 416-321-0285**


*சரியாக நடப்பவன் யாருக்கும் அஞ்சவேண்டியதில்லை*

## ஆத்மஜோதி சுவாமிகளிடம் கேட்டவை

திருமுறைச் செல்வர் சிவ. முத்துலிங்கம்

- பிறருக்கு உபகாரம் செய்வது புண்ணியம். பிறருக்கு தீங்கு நினைப்பது பாவம்.

- பிறருக்கு நன்மை செய்யா விட்டாலும் பாதகம் இல்லை. தீமை செய்யாதிருப்பாயாக.

- நாம் எப்படி வாழவேண்டும் என்பதைக் கூறும் நூல்கள் ஏராளம். வேதங்கள், புராணங்கள், ஆகமங்கள், இதிகாசங்கள், திருமுறைகள், சாஸ்திரங்கள், நீதி நூல்கள் இவையெல்லாம் நாம் வாழும் வழியையே கூறுகின்றன.

- நாம் படிக்கிறோம் படித்தபடி நடப்பதில்லை. பல மகான்கள் வாழ்ந்து காட்டினார்கள். நாம் அதையும் பின்பற்றுவதில்லை.

- ஒவ்வொருவரும் வாழ்க்கைத் தத்துவத்தை உணரவேண்டும்.

- வாழ்க்கைத் தத்துவத்தை உணர்வதனால் நல்வாழ்வு வாழ முடியும்

- நாம் ஆத்மாக்கள் என்பதை உணர்வதற்கு பல காலம் பல சாதனைகள் செய்ய வேண்டும்.

- உடல் பற்றை விடும் அளவுக்கு உடல் தேவையை மறக்கும் அளவுக்கு உள்ளம் அடங்கும். உள்ளம் அடங்கினால் ஆத்ம உணர்வு உண்டாகும்.

- இன்று உலகில் நடைபெறும் தீமைகளுக்கெல்லாம் முக்கிய காரணம் ஆத்ம உணர்வின்மையே.

- அடியவர் இறைவனை பிரார்த்தனை செய்து இறைவனை நோக்கி அழுதால் அவரைக் காப்பாற்ற இறைவன் ஓடி வருகிறார்.

✸ எம் உள்ளத்தை இறைவனுக்குத் திறந்து காட்டுவதால் அதிலுள்ள சுமையைக் குறைத்துக் கொள்வது தான் பிரார்த்தனை.

✸ மன உறுதி தளரும் பொழுது தான் மனிதன் பிரார்த்தனை செய்யக் கற்றுக் கொள்கிறான்.

✸ நிலைத்த மனத்துடன் பக்தி கொண்டு இறைவனுடன் தொடர்பு கொள்ளுதலே பிரார்த்தனை எனப்படும்.

✸ இறைவனுடன் மனத்தை நிலைபெற்றிருக்கச் செய்வதே பிரார்த்தனை.

✸ இறைவனைப் பற்றிய தியானத்தில் ஆழ்ந்திருப்பது பிரார்த்தனை

✸ இறைவனிடத்தில் பரிபூரண சரணாகதி அடைவது பிரார்த்தனை

✸ மனத்தையும் அகத்தையும் அமைதியாக உருகச் செய்வது பிரார்த்தனை

✸ ஆன்மாவை இறைவனிடம் உணர்த்தும் செயலே பிரார்த்தனை

✸ இறைவனிடம் அன்பு செலுத்திப் போற்றுவதே பிரார்த்தனை.

✸ மனித உள்ளத்திலும் மனதிலும் ஆன்மாவிலும் இடைவிடாது இயங்கிக்கொண்டிருக்கும் ஆன்மீக சக்தியின் குரல் அல்லது வழிபாடுதான் பிரார்த்தனை.

✸ கல்வி அறிவு இல்லாதவன் ஆனாலும் அடக்கமுள்ள தூய்மையான ஓர் ஆன்மாவின் ஒரு சில சொற்கள் ஒரு பண்டிதர் அல்லது பேச்சாற்றல் படைத்த சொற்பொழிவாளர் ஒருவரின் அழகான சொற்களைவிட இறைவனைக் கவரும் ஆற்றல் படைத்தவை.

**Trillium Mortgage**

**Mortgage தேவைகளுக்கு அழையுங்கள்**

**Thulasitharan Muthu**
**(Thulasi)**
**Mortgage Agent**

**Direct: 416-839-3444**

Email: thulasi17@hotmail.com

200 Consumers Rd., Suite 301
Toronto, ON. M2J 4R4
Brokerase Licence # 11396

# குடும்பப் பல் வைத்தியர்

அவசர பல் சிகிச்சை நிலையம்

முரசு கரைதலை நிறுத்தல்
பல் வேர் அடைத்தல்
அழகுபடுத்தும் பல் சிகிச்சை
முதியோர் பல் பராமரிப்பு
கிளிப் போடுதல்
பற்களை வெண்மையாக்கல்
ஞானப்பல் எடுத்தல்

கட்டுப்பற்கள்
நிரந்தரமான செயற்கைப்பற்கள்
பவுண்பல் கட்டுதல்
குழந்தைகளுக்கான பல் சிகிச்சை
வாய் துர்நாற்றம் அகற்றல்
பல் அடைத்தல்
IMPLANT



பிரபல பல் வைத்திய நிபுணர்

**DR. ஆதிகணபதி சோமசுந்தரம்**

**416-750-9969**

**2191 Warden Ave.(Warden & Sheppard)**

**OPEN 7 DAYS A WEEK**

# விவேகா அச்சகம்

VIVEKA Printers

பலவர்ண அச்சு வேலைகளை
மிகக்குறைந்த
விலையில் தரமாகவும் பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

Book Publishing, Printing, Binding
Graphic Designs, Web Designs, Digital Colour Copies,
Digital Black & White Copies

**1911 KENNEDY ROAD, UNIT 109-110**
**TEL: 416-269-1994**
**416-807-7468**